உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

THE MADURA TAMIL SANGAM

உபசுப்பிரமணிய மரபினராகிய

# ஸ்ரீ படிக்காசுப் புலவர் சரிதம்

இது

பொய்யாமொழிப் புலவர், இரட்டைப் புலவர்

சரிதங்களைத் தொகுத்தவரும்

தொண்டைமண்டலசதகப் பதிப்பாளருமாகிய

கோயமுத்தூர்

**சி. கு. நாராயணசாமி முதலியார்**

தொகுத்தது.

மதுரை புதுமண்டபம் புத்தகவியாபாரம்

இ. மா. கோபால கிருஷ்ணக் கோனரால்

பதிப்பிக்கப்பட்டது.

1928

காபிரைட்]

# அறிவிப்பு.

---

மேனாட்டு ஆங்கிலப்புலவர் சரிதமுறையைப்
பின்பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்ட
தமிழ்ப்புலவர் வரலாறுகள்.

---

1. புகழேந்திப் புலவர் சரிதம்
2. வில்லிபுத்தூரர் ,,
3. காளமேகம் ,,
4. அருணகிரிநாதர் ,,
5. அதிவீரராம பாண்டியன்.

(விரைவில் வெளிவரும்)

தொகுப்பாளர்
சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோவை.

# முகவுரை.

சைவத்துறையிலும், செந்தமிழ் நலத்திலும், தெய்வ வழிபாட்டிலும் தமது அரிய வாழ்நாளைப் பெரிதும் ஈடு படுத்திச் சந்தக்கவியைத் தமிழுலகிற் பரவச்செய்த தமிழ்ப் பெரியார் 'ஸ்ரீ படிக்காசுப் புலவர்' ஜீவிய வரலாற்றைத் தமிழன்பர்கள் சுவைத்தின்புறுமாறு வெளியிடவேண்டு மென்று நீண்டநாளாக எண்ணிவந்தேன். எனது எண்ணம் முற்றுப்பெறுமல் தடைப்பட்டே வந்து இப்பொழுது நிறை வேறுதற்கு உறுதுணையாயிருந்த எம்குடை யண்ணலுக்கு எண்ணற்ற வந்தனம்.

பாஷையின் இனிய சுவையைப் பல்வகையாகப் பாகு படுத்தி லோகோபகாரமாகத் தமிழுலகிற் குதவிய புலவர் பெருமக்களது வாழ்நாட் சரிதங்கள் ஆங்கிலம், ஆந்திரம் முதலிய பாஷைகளில் மிகுதியாக வெளிவருவது போலத் தமிழில் வெளிவருவதேயில்லை. காரணங்கேட்பின், போதிய ஆதரவின்மையே என்பது அதற்குரியவிடையாகும். ஆயின், தமிழ், சிறிது காலத்திற்கு முன்னிருந்த தளர்நிலையின்றிச் சற்று முன்னேக்கியிருப்பதாலும், ஆங்காங்குள்ள தமிழறி செல்வர்களும், பரோபகாரிகளும், தமிழபிமானிகளும், தமிழ் வளர்ச்சியில் கவனஞ்செலுத்தி வருவதாலும், தமிழ் விருத்தியடையக் கூடுமென்றே தோன்றுகிறது.

தமிழ்வாணர் ஜீவிய வரலாறுகள் பெருகித் தமிழும் தந் நிலைசிறக்க வேண்டுமானல், சர்வ கலாசங்கத்தாரும், தமிழ் வித்தியார்த்திகளும் இதுபோன்ற பிரசுரங்களை ஆதரித்து மாணவர்கட்குக் கட்டாயபாடமாக வைத்து மதாபிமானத் தையும், சமயப்பற்றையும், தமிழ்ச்சுவையையும் வளர்க்கச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் மாணவர்க்கு, தெய்

வம், சமயம் பாஷை, பெரியார், அவரது நல்வாழ்க்கை தமிழ்த்தொண்டு முதலியவைகளில் பற்றுண்டாகித்தாம் நன்மையுறுவதுடன், பிறரையும் நன்மை யடையத் தூண்டுவர்.

இதுவரையும் கிடைத்துள்ள குறிப்புக்களைக்கொண்டு நான் தொகுத்துள்ள 'ஸ்ரீ படிக்காசுப்புலவர் சரிதம்' மாணவர்களுக்கும், தமிழன்பர்களுக்கும் எளிதில் விஷயம் விளங்குமாறு புலவரது சீரியகல்வி, தெய்வப்புலமை, நல்லொழுக்கம், சமயப்பற்று, சைவசீலம் முதலியவைகளைப் பல்வகையாகப்பிரித்து அவ்வவற்றிற் கேற்றபடி தலையங்கம் அமைத்து, ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. அல்லாமல், காலவாராய்ச்சி, சமகாலத்துப்புலவர்கள், மேற்கோள் செய்யுட்டொகை, பாட்டு முதற்குறிப்பகராதி, முதலிய நவீன முறைகளையும் உடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதுவரையும் இப்புலவர் சரிதம் இவ்வளவு விரிவாக வெளிவந்ததேயில்லை.

இதற்குமுன் என்னால் தொகுத்துப் பிரசுரிக்கப்பட்ட ஒட்டக்கூத்தர், பொய்யாமொழி, இரட்டையர், அருணகிரிநாதர் முதலிய புலவர் பெருமக்கள் வரலாறுகள் சில சென்னைப் பாடப்புத்தகக் கமிட்டியார் அன்பு கூர்ந்து 3, 4-ம் வகுப்புகளுக்குப் பாடப்புத்தகமாக வைக்க அநுமதித்துபோல் இதனையும் அன்புடன் அநுமதிப்பார்களென்றே நம்புகிறேன்.

சைவம் பெருக்கிய இப்பெரியாரின் சரிதத்தை நன்மை கருதி அச்சிடமுன்வந்த தமிழறிசெல்வர் மதுரை திருவாளர் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனுரவர்களுக்கு எனது நல்லன்பும், மறவாநன்றியும் என்றும் உரியதாக. சுபம்.

சாரதா விலாசம்<br>கோயமுத்தூர்<br>5—2—28

சி. கு. நாராயணசாமி.

கோயமுத்தூர், அரசாங்கக் கல்லூரி உதவித் தமிழாசிரியரும், 'சுகாநந்தா','சாவித்திரி-சத்தியவான்,' 'சிறுத்தொண்டர்' முதலிய நாடகங்களின் நூலாசிரியருமாகிய

திருவாளர்

ச. ஐயாசாமிப் பிள்ளையவர்கள் கூறிய

# சிறப்புப்பாயிரம்.

---

நூன்முகம் ஒன்று, புத்துரையாய் எழுந்த நூல்களுக்கு அமைதல் தகுதியாகும். உலகமறிந்த நல்லிசைப் புலவராகிய ஸ்ரீ படிக்காசுத் தம்பிரானைப்பற்றி எவரும் யாருக்கும் அறிமுகஞ் செய்துவைக்க வேண்டா. பொருள்வன்மையும், சொல்வன்மையும் இவற்றிற்கு நல்லணியாக வண்ணநலனும் இனிது கெழுமிய புலவரது ஆற்றல் இந்நூலிற் பரக்க விரிந்து கிடப்பதாதலின், அதனை ஈண்டு குறிப்பது மிகையாகுமென்றெண்ணி நூலின் பெற்றியைக்குறித்துச் சிறிது தெரிவிக்கப் புகுந்தேன்.

ஓர் புலவரது நூலைக்கற்கப்புகுமுன்னர் அவரது வரலாற்றை நுண்ணிதின் அறிவதால் நூல் இனிது விளங்குமென்பது அறிஞர் பலருடைய துணிபாகும். இந்நலங்கருதியே புறமொழியார் பலரும், புலவர் பகுதியில் அவரது வரலாற்றுப்பகுதியை நுணுகி ஆராய்ந்து, அணு அணுவாய்க்கிடைக்கும் பொருளனைத்தையும் இணக்கமறிந்து புகுத்தி முறைப்படுத்திக் காண்போர் வியக்குமாறு கல்விக்கு நல்விருந்தாக வெளியிட்டிருப்பது பலரும் அறிந்த உண்மையே. ஆயின், அத்தகைய வரலாறுகள் தமிழ் மொழிக்கண் மிகவுஞ்சிலவாய்ச் சுருங்கிய அளவாய் முறண்பட்ட கருத்தின வாய்க்கிடப்பதை நினைக்க மனம் துணுக்குறுகின்றது. இதற்குக்காரணம் என்னையென உய்த்துணரப்புகுங்கால், பண்டைக்காலத்திருந்தே வரலாற்று வகையிலிருந்த ஊக்கத்தளர்ச்சியேயாகும். எப்புலவர் சரிதையை எடுப்பினும், பெற்றோரும், உற்றோரும் இன்னாரென எண்ணுதற்கும் இடனின்றித் தன்பெயர்க்கே தடுமாற்றம் உறும்வகை

யில் இருப்பதை நினைக்க உள்ளம்பதைக்க வருந்தாதார் எவரும் இரார்.

ஆனால், தமிழ்மொழியின் நற்காலப் பெருக்கின் குறியாகத் தற்காலம் அறிஞர்பலர் ஆராய்ச்சி முறையில் இறங்கி மண்ணுள் மறைந்தும், பண்ணுள் மறைந்தும், பாட்டுள் மறைந்தும் கிடக்கின்ற புதையற்பொருளைத் தோண்டித் தோண்டி அரிப்பரித்து உண்மை பலவற்றைக் கண்டுபிடித்து வெளியிட முன்வந்திருப்பதை நினைக்குங்கால், தமிழரும் இனித்தலைதூக்கிநிற்கக்காலம் மாறியதென்றே கூறவேண்டும்.

அத்தகைய ஆராய்ச்சியோடு பலநலனும் ஒருங்கமைய எழுந்ததிந்த நூல். புலவரது சார்பில் அறியத்தகுந்த அனைத்தையும் அளவறிந்து அணிந்து தந்துள்ளது. இதனை ஆக்கியோர் எம் உரிய நண்பர் திருவாளர் சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள். இவர் தமிழுலகிற்குப் பன்னாட்கு னரே அறிமுகமானவர். இவர் எழுதிய ஆராய்ச்சி நூற்கள் பல. சோர்வு சிறிதுமின்றித் தன்னலங்கருதாது தமிழ் நலம் ஒன்றையேதுன்றும் பொருளாய்க்கொண்டு இவர் தமிழ் மொழிக்கென்று உழைத்துவருவது உண்மையில் உலகம் போற்றும் உத்தமத்தொண்டென்பதை எவரும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

இந்நூற்கண் நுண்ணிய பொருள் பலவிளங்குகின்றன. இனிய மொழியில் எளிய நடையில் எழுதப்பெற்றதால், மாணவர் பகுதிக்கு மட்டற்ற பயனைத்தரும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. உண்மையில் இந்நூலை மாணவர்களுக்கு S. S. L. C. முதலிய பரீட்சைப் பாடமாக வைப்பதெனின் பரீட்சாதிகாரிகள் ஆசிரியருக்கு நன்றி செலுத்தியவராகவே கருதப்படுவார்.

இவர் இதனையே போன்று இன்னும் பல நன்னூற்கள் வெளியிட எல்லாம் வல்ல இறைவர் நல்லருள் பாலித்தருள் வாராக. சுபம்.

**கவர்மெண்டு காலேஜ், கோயமுத்தூர்,**
10—2—28.

**இங்ஙனம்**
S. ஐயாசாமி பிள்ளை.

# பொருளடக்கம்.

முகவுரை
சிறப்புப்பாயிரம்
பொருளடக்கம்
மேற்கோள் செய்யுட்டொகை

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஊரும்—நாடும் ... ... | 3 |
| 2. | பெயரும்—காரணமும் ... ... | 5 |
| 3. | மரபு அல்லது குலம் ... ... | ,, |
| 4. | சமயம் அல்லது மதம் ... ... | 6 |
| 5. | இளமையும்—கல்வியும் ... ... | 9 |
| 6. | போதகாசிரியரையடுத்ததும்—புலமையறிவு பெற்றதும் ... ... | ,, |
| 7. | வாழ்வும் – தமிழின் நிலைமையும் ... | 13 |
| 8. | கவியும்—கவிலட்சணமும் ... ... | 14 |
| 9. | காளத்தியைப் பாடியதும்—கறவைப் பசுப் பெற்றதும் ... ... | 16 |
| 10. | தொண்டைமண்டலசதகம் பாடியதும்—சிவிகை சுமக்கப்பெற்றதும் ... | 21 |
| 11. | ஸ்ரீ சிவகாமியம்மையைத் தரிசித்ததும்—படிக்காசுப் பெயர்பெற்றதும் ... | 26 |
| 12. | குடந்தை விஜயமும்— கும்பகவியும் ... | 29 |
| 13. | சீட்டுக்கவி பாடியதும்—செம்பொன்னுயிரம் பெற்றதும் ... | 30 |
| 14. | பாடும் பந்தயமும்—பல்லக்கிழந்ததும் ... | 37 |
| 15. | பாம்பலங்கார வருக்கைக்கோவை பாடியதும்— தந்தச்சிவிகை பெற்றதும் ... | 39 |

பக்கம்.

16. சேதுநாடு சென்றதும்—சம்ஸ்தானப் புலமை பெற்றதும் ... 41
17. பொருமைப்பூசலும்—நிந்தைக்கவிகளும் ... 46
18. பழவினையும்—சிறைப்படலும் ... 50
19. சீதக்காதி வள்ளலைச் சேர்ந்ததும்—செந்தமிழ் பாடியதும் ... ... 52
20. திருச்செந்தூர் சென்றதும்—செவ்வேளைப் பாடியதும் ... ... 54
21. சீதக்காதி இறப்பும்—பிரிவிற்காற்ருது பாடிய சரமகவிகளும் ... ... 57
22. தண்டலை நீணெறிசென்றதும்—சதகம் பாடியதும் ... ... 61
23. இரத்தலின் இழிவும்—இரங்கிப்பாடியதும்... 64
24. தருமபுரமும்—தம்பிரான் பட்டமும் ... 66
25. கலம்பகமும்—அரங்கேற்றமும் ... 71
26. தில்லையும்—திருவடி நீழலும் ... 73
27. இறுவாய் ... ... ... 76
28. பாடபேதங்கள் ... ... 77
29. கால ஆராய்ச்சி ... ... 78
30. ஆதரித்த அரசர்கள் ... ... 79
31. அபிமானித்த பிரபுக்கள் ... ... 79
32. சமகாலத்துப் புலவர்கள் ... ... 79
33. செய்யுள் முதற்குறிப்பகராதி ... ... 81
34. பிழையுந் திருத்தமும் ... ... 83


# மேற்கோள் செய்யுட்டொகை.

1. காஞ்சிப்புராணம்
2. நேமிநாதம்
3. செங்குந்தர் சிலாக்கியர்மாலை
4. புள்ளிருக்கும் வேளூர்க்கலம்பகம்
5. தண்டலையார் சதகம்
6. அறப்பளீசுர சதகம்
7. குமரேச சதகம்
8. திருக்குறள்
9. நாலடியார்
10. தொண்டைமண்டல சதகமேற்கோள்
11. தொண்டைமண்டல சதகம்
12. தனிச்செய்யுட் சிந்தாமணி
13. தனிநிலைக்கவிகள்
14. சீட்டுக்கவித்திரட்டு
15. தமிழ் நாவலர் சரிதை
16. கொங்குமண்டல சதகம்
17. உமைவருகைப் பதிகம்
18. திருவாசகம்
19. சங்கரசோழனுலா
20. ஒருதுறைக்கோவை
21. கம்பராமாயணம்

22. கந்தபுராணம்
23. பழங்கவித்திரட்டு
24. தனிச்செய்யுட் கோவை
25. ஜிவக சிந்தாமணி
26. திருப்புகழ்
27. திருச் செந்திற்கலம்பகம்
28. தேவாரம்
29. தில்லைக்கலம்பகம்
30. சோழமண்டலசதகம்

# தற்சிறப்பு.

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்குச் செயங்கொண்டான்
விருத்தமென்னு
மொண்பாவுக் குயர்கம்பன் கோவையுலா வந்தாதிக்
கொட்டக் கூத்தன்
கண்பாவு கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக்
காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலா தொருவர்
பகரொணாதே."



மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

திருச்சிற்றம்பலம்.

# படிக்காசுப் புலவர் சரிதம்.

## காப்பு

### நேரிசை வெண்பா

*சந்த முறும்படிக்கா சுப்புலவன் சற்சரிதை*
*சந்த முறவெழுதிச் சாற்றுதற்குத்—தந்திமுகன்*
*பூங்கமலப் பாதம் புகழ்சேர் துணையென்றே*
*ஆங்கமல நெஞ்சே யறி.*

### தோற்றுவாய்

இற்றைக்குச் சுமார் ஆயிரவருடங்கட்கு முன், யாவரும்பரவும் மேவருஞ் சிறப்புடைய நந்தமிழகத்தில் உயர் குணம், ஒழுக்கநலம், கல்வி, வாய்மை, நடுவுநிலைமை முதலிய உத்தம குணங்களால் தலை சிறந்து அரிய தம்புலமைமிகுதியால் தமிழரசர் சபைகளில் பலர் புகழ வீற்றிருந்த ஔவையார், பொய்யாமொழி, ஒட்டக்கூத்தர், கம்பர், புகழேந்தி முதலிய புலவர் பெருமக்களைப் போலவே, இப்பொழுதைக்கு ஐந்நூறு வருடங்கட்குப் பிற்பட்டகாலத்தும், மேற்கூறியவர்கள் அமிசங்களிற் சிலபொருந்திய செந்தமிழ்

வல்ல புலவர்கள் இல்லாமற் போகவில்லை. தமிழ் மூவேந்தர் வாழ்வு நிலைகுலையவும், தமிழை நன்கு மதிப்பாரும், ஆதரிப்பாருமாகிய வள்ளல்களும், பிரபுக்களும், நாளுக்கு நாள் அருகிவரவும்நேர்ந்ததால், தமிழைக் கற்பாருங் கேட்பாரும், அபிமானிப்பாரும் இல்லாத காரணத்தால் தளர் நிலையெய்த, அதனால் தண்டமிழ்ப்புலவர் வளர்ச்சிகுன்றி வாழ்வு பெறாது ஒழிந்தனர். எனினும், எஞ்சிய குறு நில மன்னரும், பெருநிலக் கிழவரும், பிரபுக்களும் ஆங்காங்கு தமது சிற்றரசுகொண்டு செந்தமிழையும், அது கற்றுவல்ல கவிகளையும் கூடுமானவரை ஆதரித்தும், அபிமானித்தும் வர மறந்தாரில்லை. அவ்வாறு ஆதரணை பெற்றவர்களில் நமது சந்தக்கவிப் படிக்காசுப்புலவரும் ஒருவர். சைவ சீலராய்ச் சிவநெறித் தொண்டராய், மெய்யறி புலவராய்ச் சந்தக்கவிச் சிங்கமாய்ச் சான்றோர் குழாத்தராய்த் தமிழகத்தே சீர் சிறக்க விளங்கிய இப்புலவரின் உண்மை வரலாறு, மாறுபட்டவகையில் வேறுபட்ட விதமாய்க் கற்பனையாதிய கட்டுரைகள் செறிந்து வழங்கப்படுகின்றது. இதனை ஆராய்ச்சி வழிநின்று கோதுநீக்கிக் கூடுமானவரை மெய்வைத்த வரலாறுகத் திகழும்படி நடுநிலைநின்று சரிதமுறைக் கேற்ப இதன் கீழ் தருகின்றோம். அவர் வரலாறு வருமாறு :—

### ஊரும்—நாடும்.

"வையு மாறுபல் லுயிர்களுக்
கெல்லையில் கருணைத்
தாயனுள் தனியாயின
தலைவரைத் தழுவ

ஆயுநான் மறை போற்ற நின்று
அருந்தவம் புரியத்
தூய மாதவம் செய்தது
தொண்டை நன்னாடு"

எனத் திருவருட்டன்மையும், செந்தமிழ்ப் புலமையுஞ் சிறந்த சிவஞான முனிவரும்,

"தெண்ணீர் வயற் றொண்டை நன்னாடு
சான்றோ ருடைத்து."

என ஔவைப்பிராட்டியாரும் புகழ்ந்தோதப்பட்ட பெருமையுடையது தொண்டைநாடு. இந்நாட்டிலே "தென் களந்தை" என்பது சிறந்ததோர் சிவஸ்தலம். இச்சீருரிலே தான், 'நள வெண்பாப்பாடிய புகழேந்திப் புலவரும்,' 'திருக் கழுக்குன்றத் தலபுராணம்,' 'திருவாரூருலா' முதலிய வியற் றிய அந்தகக்கவி வீரராகவரும், நேமிநாதம் என்னும் நூலா சிரியர் 'குணவீர பண்டிதரும்' தோன்றிப்புகழ் பெருக்கியது. இப்புலவர் பெருமக்கள் இப்பதியினர் என்பதற்கு அடியில் வரும் உதாரணப் பாடல்களே போதிய சான்றும். அவை கள் :—

"கன்னன் களந்தை கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்சும் ஏடெனக் கற்றான் கனமுத்தமிழையுமே."
(கவிவீரராகவர்)

"மாலார் களந்தைப் புகழேந்தி"
"ஐயன் களந்தைப் புகழேந்தி"
"காரார் களந்தைப் புகழேந்தி"
"நிமிர் களந்தை வருபுகழேந்தி"
(புகழேந்திப்புலவர்)

"கற்றவர் புகழுங் களந்தையேன் பெரும்பதிக்
குற்றமில் வாய்மைக் குணவீரபண்டிதன் — மண்பரவும்
கோடாத கீர்த்திக் குணவீர பண்டிதனும்
பீடார் களந்தைப் பிரான்".

"உளமலி பேரரு ளுயிர்மிசை வைத்த
வளமலி களந்தை வச்சணந்தி முனிவரன்
கொள்கையின் வழாஅக் குணவீரபண்டிதன்"

என வருவனவேயாம். (குணவீரபண்டிதன்)

இவர்களன்றி,

"நன்றாய் விளைந்ததை வேதியர்க்கீந்தந்த நன்மையினாற்
பொன்றான் விளைந்திட நெற்போலவே யதைப்போரடித்துக்
குன்றாக் குவித்ததை நெற்பரிமாற்றங் கொடுத்தளித்தான்
மன்றார் களந்தைக் குடிதாங்கியுந் தொண்டைமண்டலமே"

எனவரும் தொண்டைமண்டல சதகச் செய்யுளால், 'குடிதாங்கி'யென்னும் வேளாண் செல்வரும் இவ்வூரில் தோன்றித் தமது கொடைமடத்தால் இரவலரை இன்புறுத்தினதாக அறியப்படுகிறது. மற்றும், இந்நற்பதிக்கு 'ஆதித்தேச்சுரம்' 'களந்தேச்சுரம்' 'பொன்விளைந்த களத்தூர்' என்ற சிறப்புப் பெயர்களும் வழங்கப்படுகின்றன.

இவ்வூர் தற்காலம் தென்னிந்தியாப் புகைரதப்பாதையில் செங்கற்பட்டுக் கருகில் 'ஒத்திவாக்கம்' என்னும் ரயிலடிக்குச் சமீபத்தில் இருக்கிறது. இத்தகைய பேரூரேநமது புலவர் பிறப்பகம் என்பதற்கு அடியில்வரும் பாட்டல்களையும் ஆதாரமாகக் கொள்க.

"மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன்"
"மட்டுலவு சோலைக் களந்தைப் படிக்காசு"
"விஞ்ஞையர்கள் தம்பிரான் களந்தைப் படிக்காசு"
"நிமிர்களந்தை வருபேரூரன்."

ஓர் பிரபல தமிழாசிரியர், இவரது பிறப்பகம் இராம நாதபுரம் சமஸ்தானத்தைச் சார்ந்த முதுகளத்தூர் எனக் கூறுகின்றனர்.

---

## பெயரும்—காரணமும்

இவர் இயற் பெயர், இன்னதென்றறியக் கூடவில்லை. நமது தமிழ் நாட்டுப் புலவர் பெரும்பான்மையோரது இயற் பெயர்கள் இன்னதென்றறியாதவாறு மறைந்துள்ளன. இணைக் கப்பட்ட பெயராகவும், தோன்றிவளர்ந்த ஊரின் அடியாகப் பிறந்த இடப்பெயராகவும், சுபாவ அடையாளப் பெயராக வும் ஒன்று, புலவர்களை மருவி வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் இப்பெரியார் பெயரும் ஆயிற்று, ஆயின், இவர்க்கு வழங்கும் 'படிக்காசுப் புலவர்' அல்லது 'படிக்காசுத் தம்பிரான்' என்னும்பெயர், இவரது சைவ நலத்தூய நெறிக்கும், மெய்ப்புலமைக்கும் மனமுவந்த தில்லைச் சிவகாமி அம்மையார், இவர் பாடலுக்குப் படிகாசு ளிக்க, அத்தால்வந்த காரணச் சிறப்புப் பெயராகும். இப்பெ யரே நிலைத்தபெயராய் நிலவவே இயற்பெயர் மறைந்தது போலும்.

சிலர் இவர் இயற்பெயர், 'களந்தையான்' எனவும் கூறுவர்-

## மரபு அல்லது குலம்.

இவர் மரபு அல்லது சாதி, திருக்கயிலாய பரம்பரை யினராகிய செங்குந்தர் என்னும் 'கைக்கோளர்' என்ப. இவர்

இம்மரபினரென்று தொன்றுதொட்டு யாவராலும் ஒருமுக மாய் வழங்கப்பட்டு வருவதுமன்றி நூல்களிலும் பதிப்பிக் கப்பட்டு வருவதுமே போதியசான்றும். அவைகளில் ஒன்று அடியில் வருமாறு:—

"புகழ்பூத் திடுந்தில்லை மேலோனை யம்மையைப் போற்றி [யெங்கு
மிகழ்பூத் திடாதபொற் காசைப் பஞ்சாக்கரத் தின்படிமே
னிகழ்பூத்தல் பெற்றுப்புள் வேளூர்க்கலம்பக நீட்டியருத்
திகழ்பூத்து நின்ற செயலோர் செங்குந்த சிலாக்கியரே"
(செங்குந்த சிலாக்கியர் மாலை.)

## சமயம் அல்லது மதம்.

புலவர், ஆனேறுயர்த்த அந்தி வண்ணனாகிய சிவ பெருமானின் செம்பொற் சீரடி சிறிதும் மறவாச்சீலரென் பதும், அவனது பரந்த மெய்ப்புகழையே பாடிப்பேரருள் பெற்று அவன் கழற்கீழ் சேர்வதே சிறந்த கதியெனச் சிந்தை மேற்கொளும் திறமுடையா ரென்பதும், இவர் பாடிய புள்ளிருக்கும் வேளூர்க்கலம்பகச் செய்யுட்களாலும் தண்டலையார் சதகப்பாடல்களாலும் தனி நிலைக்கவிகளா லும் தெள்ளிதின் உணரலாகும். அன்றியும், இவர்க்கு வழங்கப்படும் "தம்பிரான்" என்றபட்டப் பெயராலும் இவர்சைவ சமயப்பெரியாரென்பது நன்கு வலியுறும். சைவ சமயத்திற்குத் தலைவர் சிவபெருமான் என்பது யாரே அறி யாதார்? சைவம் என்னும் சொல்லின்பொருள் சிவ சம்பந் தம் உடையது, சிவனோடு தொடர்புடையது என்பதாகும். இதனை "சைவம் சிவத்தொடு சம்பந்தம் என்றான்" எனுஞ் சிற்றம்பல நாடிகள் திருவாக்கும் நன்கு வலியுறுத்தும். சிவம்

என்னுஞ் சொல்லின் பொருள் மங்களம் (நன்மை) என்பதாகும். நமது இன்ப அன்பு நெறியாகிய சைவ சமயத்தின் மாட்சி அளவிடற் கரியதாகும். எல்லாச் சமயங்களுள்ளும் மிகத்தொன்மை யுடையதும், நிறைந்த உண்மைகளை யுடையதும் நமது சைவ சமயமேயாம், திருஞான சம்பந்தப் பெருமானார்முதலிய பெரியோர்கள், நமது சைவ நன்னெறியினைத் திருநெறி, ஒளிநெறி, ஒருநெறி, சிவநெறி எனப் பெரிதும் சிறப்பித்துப் பாராட்டிக்கூறி யிருப்பதனாலேயே இம்மதத்தின் அல்லது சமயத்தின்பெருமை இனிது விளங்கலாகும். இவர், இத்தகைய சைவத்தின் தலைவர்க்கும், அவரது புதல்வர்களாகிய ஐங்கரற்கும், அறுமுகவற்கும், வணக்கமும், வாழ்த்தும் கூறுவதால் இவர் சைவ சமயத்தவரேயாவர். இவர் பாடிய கடவுள் வாழ்த்துக்கள்:—

"மாவிருக்குந் தலத்திரண்டு மருந்திருக்கு
மவரிடத்தில் வைத்திய நாதர்
சேவிருக்குங் கொடியுடையார் சென்றிருக்குந்
தேடரியார் செவியின் மூவர்
பாவிருக்கு மவர் சடைமேற் பாம்பிருக்கு
மால்பணியும் பாதத் தேகட்
பூவிருக்கு மடையாளம் புள்ளிருக்கு
வேளூரெம் புனிதனார்க்கே."

(புள்ளிருக்கும் வேளூர்க் கலம்பகம்.)

"சுகத்திலே யிருந்து வளர் பிரமபதம் விண்டோதஞ்
சுகமெல்லா
மிகத்திலே யின்பமல்லா லத்தனையு முத்தியென
வெண்ண வேண்டா

செகத்திலே புகழ்படைத்த வெளூர ரிருபாதனு
சேவித்தோர்கண்
முகத்திலே விளித்தாலும் போதுமையா வவர் சீவர்
முத்தர் தாமே"

"சீரிசைக்குந் தண்டலேயார் அஞ்செழுத்தை
நினைக்கில் முத்திசேரலாகும்" (36)
'கரந்தை மதி சடையணியுந் தண்டலேயார்' (37)
'மறிதருமான் மழுவேந்துந் தண்டலேயார்' (59)
'கூன்செய்த பிறையணியுந்தண்டலேயார்' (2)
'பிட்டுவர மண்சுமந்த தண்டலேயார்' (3)
'கொப்பிட்ட உமைபாகர் தண்டலேயார்' (12)

எனவருவனவற்றால் சிவபெருமானையும்,

(தண்டலேயார் சதகம்)

"கள்ளூர் கழனிப் புள்ளூ ரடைந்துந்
தென்புலத் தமர்ந்த நன்புன லாடியும்
ஆவணவீதி மூவலம் வந்துந்
தள்ளையை யறுமுகப் பிள்ளையை வணங்கியும்
விண்மருந் துதிக்கு மண்மருந் தருந்தியுங்
குருவடி வாயநின் றிருவடி யடைந்தே
னுயிரை யிதுவுமோர் பேயென விகழாது
சிறப்புறத் தமியேன் பிறப்பறுத்தருளா
யாரா வமுதே யடியர்தந்
தீரா வல்வினை தீர்த்த வெம்பரனே"

(புள்ளிருக்கும் வேளூர்க்கலம்பகம்.)

என்ற செய்யுளால் ஐங்கரனையும் அறுமுகவனையும் வணங்கி யுள்ளது விளக்கமாம். மற்றும் இவரது கடவுள் வாழ்த்துச்

செய்யுள்களால் இவர்க்குக் கடவுளர்பால் பதிந்துள்ள மெய்ப்பத்தியும், உள்ளன்பும் சமபப்பற்றும் நன்கு அறியப்படும்.

## இளமையும்—கல்வியும்.

இவரது பாலப்பருவமும், வளர்ந்து பெருகிய விதமும், பெற்றோர்கள் இன்னாரென்பதும் அறியக்கூடாமல் அந்தகாரப் பட்டிருக்கின்றன. பிற்காலத்தில் இவர் கல்வியிற் பெருகிப்பெயர் சிறந்தது கொண்டு, பிள்ளைப்பருவத்தே உரியகாலத்தில் பள்ளியிற்சென்று கல்வி கற்கத்தொடங்கி அப்பருவத்திற்கும் அறிவினுக்கும் ஏற்ப, ஆத்திசூடி முதலிய நீதிநூல்களையும், திவாகரம்முதலிய சிற்றிலக்கணங்களையும், கோவை, உலா, அந்தாதி, கலம்பகம், பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்களையும் பிழையறக்கற்று, மாணவர் பலரினும் முதன்மையுடையாராய்க் கல்வியினும் மேம்பட்டு விளங்கினாரென்று அறியப்படுகின்றன. இவர் கற்குந் திறமையையும் கவன சக்தியையும் கண்ட கணக்காயர் மிக்க வியந்து, மகிழ்ந்து, 'பிற்காலத்தே இவன், தமிழகத்தில் பெரும்புலவனாக வீறு கொண்டு விளங்குவானெனப்' பன்முறையும் கூறிப் பாராட்டினாரெனவும் கேட்கப்படுகின்றது.

## போதகாசிரியரை யடுத்ததும்-புலமையறிவு பெற்றதும்.

இங்ஙனம் கணக்காயரிடத்துக் கற்கத்தக்க நூல்களனைத்தும் கசடறக்கற்று, நல்லுணர்வுபெற்று, வல்லவராய இவர் பின்னர், புலமையிற் பெரியாரெனப் புவியுளோர் புகழ்ந்து போற்றுமாறு புலமைக் கவிகற்றுச் சிறப்படைய அவாகொண்டு அத்துறையில் வல்லாராகிய நல்லாசிரியரை யடுத்து, அவர்

பாற் கல்விபெற அத்தகையார் எங்குளாரென ஆராய்ந்தனர். அப்போது பிறக்க முத்திபளிக்கும் பெரும்பதியாகிய திருவாரூரிலே பல்காப்பியக் கடலையுளக்கிச் சங்க நூல்களிலூறித் தொல்காப்பியம் ஏப்பமிடும் வல்லவராயும், தென்மொழியிற் சிறந்ததுபோலவே, வடமொழியிலும் அகன்ற புலமையையும் தெளிவையையும் அடைந்து, சான்றோரென்னும் தகுதிவாய்ந்து, கி. பி. 1763-ல் தமிழகத்தில் சைவ நலத்தில் விளக்கம் பெற்றிருந்த திருவாவடுதுறை ஆதீனத்து ஈசான மடம் ஸ்ரீ. சுவாமிநாத தேசிகர்முதலிய நல்லோர்களால் நன்கு பாராட்டப்பட்டுத் தமது நூல்களிலும் புகழ்ந்து கூறப்பெற்ற பெருமை வாய்ந்தும், இலக்கண நூல்களை எழுத்தெண்ணிப் படித்த பயிற்சி மிகுதியால், அப்புலமைப்பெருக்கந்தோன்ற "இலக்கண விளக்கம்" என்னும் பெயரிய சிறந்த நூலொன்றியற்றி, அச்சிறப்பால் "இலக்கண விளக்கம் வைத்திய நாததேசிகர்" என்னும் பெயர் சிறந்தபெரும் புலவர் உளாரெனக் கேட்டு மிக்க மகிழ்ச்சியுற்று, அவர்பால் விரைந்துசென்று கல்வி கற்கத்துணிந்தனர்.

துணிந்த இவர், சோதிட வல்லாரைக்கொண்டு நன்னாள் ஆராய்ந்து, சகுனமாதிய நன்னிமித்தம்நோக்கி, ஸ்ரீ. பால்சுந்தர மூர்த்திகளின் இனியதமிழ் கேட்கும் விழைவால்பரவை தூது சென்ற தியாகராசர் இனிதுறையும் திருத்தலமாகிய திருவாரூர் சேர்ந்து, நாவலர் பெருமானின் இல்லமெய்தி அவரைக்கண்டு வணங்கித்தமது பேரவாப்பெருக்கினை வெளியிட்டனர். கேட்டதேசிகர் மாணவரது அன்புறு மனத்தையும், தமிழ் பாலுள்ள விழைவையும், ஒழுக்க நலத்தையும், உயரிய நோக்கத்தையும் ஊன்றியறிந்து அவ்வாறே அருளுவதாக வாக்களித்தனர். படிக்காசரும் அவர்பால், 'நன்

னூல்' 'தோல்காப்பியம்' 'யாப்பருங்கலம்' முதலிய இலக்கண நூல்களையும், 'சிலப்பதிகாரம்' 'சிந்தாமணி' முதலிய பஞ்ச காவியங்களையும், 'இராமாயணம்' 'காஞ்சி புராணம்' முதலிய இலக்கியங்களையும் 'சிவஞான போதம்' 'சிவஞான சித்தியார்' முதலிய மெய்கண்ட சாத்திரங்களையும், சந்தேக விபரீதமின்றிக் கேட்டு ஐயந்திரி பறக் கற்றுத்தெளிந்தனர். இத்துடன் சந்தக்கவிகளை அந்தமுடன் இசைத்து இசை பெற வேண்டுமென்னும் வேட்கையும் அதிகரித்தமையால் சந்தக்கவிகளிலே பெரிதும்விரும்பிப்பயின்று அக்கவிகளை அப்பொழுது தொடங்கியே பாடிப் பழகிவந்தனர். சீட்டுக் கவி செய்வதிலும் நமது படிக்காசருக்கு விருப்பமிகுதி; இவை யெல்லாவற்றிலும் முனைத்துத் தலைமையாய் நின்றது வசை பாடும் கருத்து. காளமேகப்புலவர் வசைப்பாடல்களைப் பல்கால் பயின்று கற்றதனாலும், அவர்தம் செய்யுட்களை வியந்ததனாலும், இவ்வெண்ணம் இவருக்கு அதிகப்படலாயிற்று. இவ்வுண்மை இவர் பின்னர் மாந்தை மகாசனத் தலைவருக்கு எழுதிய சீட்டுக்கவியில்—'தூளிபடவேவந்த' என்னும் தலைப்பில்,

> ''காளமேகம் போலவே வசைபாட யாமும் இக்
> காசினியில் அவதரித்தோம்''

எனக்கூறியுள்ள அடிகளால் அறியலாகும்.

> ''சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
> வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்''

என்றபடி சந்தக்கவி இயற்றுவதிலும், வசைப்பாடல் பாடுவதிலும் சதா மனம்பழகி மிக்க அனுபவ முற்றதால், அக்

கவிகள் இசைப்பதில் மிக்க வல்லுநராய், கைவந்தவராய் யாவராலும் புகழ்ந்து கூறுமாறு விளங்கினர். இங்ஙனம் ஆசிரியரின் அநுக்கிரகத்தால் எல்லாக்கலைகளையும் இனிதுணர்ந்து பூரணப் புலமையடைந்து வல்லாராய்ச்சிறந்தபின், ஆசிரியரிடத்து நல்லாசியுடன் விடைபெற்றுத் தமதூர்க்குச் சென்றனர். இவர், ஸ்ரீ. வைத்தியநாத நாவலர்பாற் கல்வி கற்றுப் புலமை யடைந்தாரென்பதைத் தாம் பின்னொரு சமயம் தமது தமிழ்க் குரவரது திருப்புதல்வர் ஸ்ரீ. சதாசிவ தேசிகரைக் கண்டுபாடிய ஒருதனி நிலைக்கவியால் அறியப்படுகிறது. அது-தமதுஆசிரியர், அந்தமில் இன்பவீடுசென்றபின் அவரூருக்குச் சென்று, ஆசிரியரது மகனாரைக்கண்டு விசாரிக்கும் பொருட்டுச் செம்மற்பட்டிக்காடு வழியே திருவாரூர்க்குச்சென்று கொண்டிருக்கையில், தேசிகருடைய மாணவர் சிலர் தூதுளங்காய் பறித்துக்கொண்டே யாப்பருங்கலக்காரிகை நெட்டுருப் போட்டு மனப்பாடம்செய்து கொண்டிருப்பதைப் பார்த்து வியப்புற்றுத் தேசிகர் வீடெய்தி அவரைக்கண்டு வந்த காரியத்தை விசாரித்து முடித்தபின், கல்விவிஷயமாகச் சிறிதுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், தாம் வழியிற்கண்ட மாணவரதுசெயலைக் கவிமூலம் அறிவிக்க நினைந்து அக்கருத்தை அமைத்து விநோதார்த்தமாக,

"கூடுஞ் சபையில் கவிவாரணங்களைக் கோளரிபோற்
சாடுஞ் சதாசிவ சற்குருவே! முன்னுன் தந்தை தன்னால்
பாடும் புலவர்க ளானோம்இன் றிச்செம்மற்பட்டியெங்குங்
காடுஞ் செடியுமென் னேதமிழ்க் காரிகை கற்பதுவே"

என்று ஒரு கவிபாடினர். தேசிகர் அக்கருத்துணர்ந்து மிக மகிழ்ந்து அவரது ஆசிரியபக்திக்கும், தம்பாலுள்ள மெய்யன்புக்கும் அதிசயித்து ஆனந்தித்தனர் என்பதே.

## இவரது வாழ்வும்—தமிழின் நிலைமையும்

நமது புலவர், தெய்வத்தமிழ்கற்றுத் திருந்திய தமது நாவால் செந்தமிழ்ப் பாக்களைத் தேனெனப் பாலெனத் தித்திக்கும் வகையிற் பாடிக் கவி யின்பத்தைத் தமிழுலகிற் பரவச்செய்யத் தோன்றிய காலத்துத் தமிழ்ச் சுவையின் நல முணர்ந்த தமிழ் நாட்டு வள்ளல்களும், பேரரசர்களும், செல்வங்குன்றி அரசிழந்து அறவே யொழிந்து சிற்றரசரும், பெரு நிலக்கிழவரும், சிறு கொடையாளருமே ஆங்காங்கு தோன்றிச் சிற்றரசுகொண்டு திகழ்ந்து வந்தனர். முந்தையோர்போல் தமிழணங்கின் தன்மையுணர்ந்து அவள் தளரா வகை தற்காத்துப்பேணி வந்ததுபோற் பேணாது, பராமுகமாயிருந்ததனால், தமிழ் மாது தன்னலங்குன்றி ஒளியிழந்து மலின தசையுற்றனள். எனினும், அக்காலை ஆங்காங்கு சிறந்து நின்ற சைவ குரவர்களும், பண்டார மூர்த்திகளும், தங்களுக்கிருந்த செல்வாக்காலும், செந்தமிழ்பால் வைத்த அன்பின் மிகுதியாலும், தமிழையும், தமிழ் கற்ற பாவலரையும் ஆதரித்தும், அன்புடன் போற்றியும், தாமும் தண்டமிழ் கற்றும், வடமொழியுணர்ந்தும், அவைகளில் தேர்ச்சியுற்றுப் புலமைப் பெரியாராய் மேம்பட்டுத் தமிழுலகையும், சைவ மடங்களையும், தழைத்தோங்கச் செய்தனர். மடாலயத் தலைவர்களும், தமிழ்கற்ற பிரபுக்களும் அக்கால் தமிழ் வளர்ச்சியை மேற் கொண்டிராவிடில், தமிழ் மடந்தை மங்கலமிழந்து துர்த்தசையில் ஆழ்ந்தேயிருப்பள். இந்நன் முயற்சியால், செல் சிதலைமுதலியவைகளின் வாய்ப்படாது பழந்தமிழ் ஏட்டுச்சுவடிகள் செவ்வனம் காக்கப்பட்டுப் பிற் காலத்தோருணர்ந்து மகிழ்ந்து உபகாரம் பெற்றுய்யுமாறு

விளக்கம்பெற்றது பாராட்டற் பாலதே. இங்ஙனம் தமிழ் வளர்ச்சிக்கும், புலவர் பெருக்கிற்கும், பேருபகாரமாயிருந்த சைவ மடங்கள், 'திருவாவடுதுறை' 'தர்மபுரம்' 'திருவண்ணமலை' 'வைத்தீஸ்வரன் கோவில்,' 'திருமங்கலம்' முதலிய வைகளும், சிற்றரசர்கள் சேதுபதி இரகுநாத வேந்தரும், அரியலூர் ஜமீனும், பிரபுகுலவள்ளல் சீதக்காதி மரைக்காயருமே ஆவர். இக்காலத்துப் பிரபலம்பெற்று விளங்கிய இலக்கண நூல்கள்—சுவாமிநாத தேசிகர் 'இலக்கணக் கொத்தும்', சிவஞான முனிவர் 'தொல்காப்பிய சூத்திர விருத்தியும்,' 'இலக்கணச் சூராவளியும்,' வைத்தியநாத நாவலர் 'இலக்கண விளக்கமுமே' ஆம்.

## கவியும்—கவி லட்சணமும்

நமது படிக்காசரிடத்து உண்மைக் கவிவலானுக்கு இயற்கையாய் அமைந்திருக்கவேண்டிய செய்யுள் இலக்கண வரம்புகளும், சொல்லமைப்பும், பொருட் செறிவும், தட்டின்றிய நாவன்மையும், கமன சக்தியும், சுவை ஞானமும், விற்பன மிகுந்த கற்பனை மிருதியும், நுண்ணறிவும், நூற்புலமையும் ஒருங்கே பொருந்தி,

''தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்த பைந்
 தேன்மடை திறந்த தெனவே
செப்புமுத் தமிழினொடு நாற்கவிதை நாற்பொருள்
 தெறிந்து உரைசெய் திறமையுடனே
விள்ளரிய காவியத் துட்பொரு ளலங்காரம்
 விரிவிலக்காம் விகற்பம்

வேறுமுள தொன்னூல் வழக்கு முலகத்தியல்பு
மிக்கப்ர பந்த வன்மை
உள்ளவெல் லாமறிந்தலை யடங்குங் கடலை
யொத்திச் சபை கண்டபோ
தோங்கலை யொலிக்கின்ற கடல்போற் பிரசங்கம
துரைப் பவன் கவிஞனுகும்—''

(அறப்பளீசுர சதகம்)

''எழுத்தசைகள் கீர்த்தனைகள் அடிதொடைகள்சிதையா
திருக்க வேண்டு மப்பா
வீரைம் பொருத்த மொடு மதுரமாய் பளபளப்
பினிய சொற்களமைய வேண்டும்
அழுத்தமிகு குறளினுக் கொப்பாகவே பொரு
ளடக்க மிருக்க வேண்டு
மன்பான பாவின மிசைந்து வரல் வேண்டுமு
னலங்கார முற்றதுறையில்
பழுத்துள மூவந்தோசை யுற்றுவரல் வேண்டும்
படிக்கு மிசை கூடல்வேண்டும்
பாங்காக வின்னவை பொருந்திடச் சொற்கவிதை
பாடிற் சிறப்பென்பர் காண்—''

(குமரேச சதகம்)

''உரைகொண்டு சொல்வரிசை தேர்ந்து பொரு
[ளின்பவகை
யோசை பெற்றே மதுரமா
யுற்றநவ ரசமுடன் கற்பனை யலங்கார
முண்டாகியே கௌடமாய்

நிரைகொண்ட சீர்தளை விகற்பம் பொருந்தி நன்
　　னீதியரய்க் கடை துடிப்பாய்
நிறைகின்ற சபைதனி லுதாரண மதாகி நிலை
　　நின்று பழு தென்றிடாமல்
திரைகொண்ட தண்கடலில் வருமமுத பாகமாய்த்
　　தேசப்ர சித்தியாகச்
செப்புமொரு கவி—"

எனச்சதகாசிரியர்கள் நுவலும் எடுத்துக்காட்டுகளுக்குத் தகுதிபுடைமையும் நன்கு சிறந்து அத்துடன் தெய்வவழி பாடும், சிவ மணப்பொலிவும், உள்ளன்பும், உருகிய பக்தியும், அமைந்து சந்தக் கவிக்கோர் அரிமாப்போன்று வீறு பெற்றிருந்தனர். இந்நலங்கருதியே பிற்காலக் கவியொருவர், "பண்பாகப் பகர் சந்தம் படிக்காசலா தொருவர் பகரொணாதே" என இவரைப்பாராட்டிப் புகழ்ந்தனர் ஆவர்.

### காளத்தியைப் பாடியதும்—கறவைப்பசு பெற்றதும்.

செந்தமிழ்த் துறையனைத்தும் தோய்ந்து இனியகவிகளை இன்பமுற இசைக்கும் இயற்றமிழ்ப்புலவராகிய படிக்காசர், இல்லறத்தை நல்லறமாக்குதற்கு அன்பொத்த மங்கையொருத்தியைத் தம்மரபில் ஆராய்ந்து மணமுடித்தனர். காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்னும் ஆன்றோர் உரைக்கேற்பக் கணவனும் மனைவியும் ஒன்றுபட்ட மனத்தராய் இல்வாழ்க்கையை இனிதுற நடாத்தினர். இவர்களது ஐக்கியமுற்ற இன்பவாழ்வின் பயனாகத் தலைநாளில் பிள்ளைக்குழந்தையொன்று வாய்த்தது. அம்மகவைப் பெரும் பேறுக எண்ணிச்செல்வமாக வளர்த்து நாளும் சீராட்டி வந்தனர்.

இவர்கள் வாழ்வுகண்டு பொறுததுபோல் வறுமை என்னும் வன்பிணி இவர்களைப்பற்றிக் கொடுமையாய் வறுத்தத் தொடங்கிற்று. புலவர் செய்யும் வகை அறியாராய்த்திகைப்புற்று மனம்நொந்து வருந்தினர்.

வறுமை யென்னும் கொடுமையின் வயப்படும்பொழுது அறிவு குன்றிவிடுகிறது. பேரறிஞர்களும் இதன்வயப்பட்டவரே. அறிஞரும் உயர்ந்தோருங்கூட மிடியின் வாய்ப்பட்டுவிடின், அவர்கள் மூளைசெல்லரித்ததுபோல் ஆய்விடுகின்றது. 'வறுமையானது ஒருவனது அறிவு ஊறுதற்குரிய ஊற்றுன மூளையை உலரச் செய்துவிடுகின்றது.' 'வறுமைகொண்ட அறிவாளிகளின் மனங்கள் மேகம் சூழ்ந்த மலைப்பிரதேசம் போல் இருண்டு விடுகின்றன.'

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்
நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடரிது."

(திருக்குறள்)

"மந்திரம் மருந்து முதலியவற்றின் உதவியால் ஒருவன் நெருப்பிலே கிடந்து நித்திரை செய்தலும் முடியும். ஆனல், வறுமை வந்தால் யாதொன்றாலும் உறக்கமில்லை."

அறிவின் பெரிய விரோதியான வறுமை, மனித ஜாதியாருக்குரிய நோய் முதலிய பகைவர்களுக்கெல்லாம் தலைமைப் பதவிவகித்து நிற்கிறது. அதனை ஒழிக்க முயற்சி செய்வது இன்றியமையாத கடன்.

அறிவுத்தெய்வமும், பொன்னரசியும் சக்களத்திளாகவோ! மாமி மருகிகளாகவோ! வாழ்வதாகக் கருதப்படின், புலவர்கள் வாழ்வு தாழ்வுதானென்பது அறியாதார் யாரே?

இந்நியதின்படி, உணவுக்கும் வகையின்றிப் பலகால் உபவாச மிருந்தனர். இவர் தம்மனைவியும், உடன் சேர்ந்து துன்புற்றனள். இதனால், இளங்குழந்தையை ஈன்றெடுத்த இல்லக்கிழத்திக்குத் தேகம் இளைத்துத் துரும்பாயிற்று. பால் சுரப்பும் அறவேயற்றது. சுவைதொறும் சுவைதொறும் பால்காணாது குழவி தாய்முகம் நோக்கி அரற்றியது. தாழாத மனைவி நெஞ்சமயர்ந்து தனது கணவனைநோக்கிக் கண்ணீர் வடித்தனள். புலவரும் இப்பொல்லா வறுமையைப் போக்குதற்குப் பாற் பசு கொள்ளுதற்கு வன்மையிலராய் வருந்தினர். புத்தென்னும் நரகத்தினின்றும் தம்மை நீக்கிய புதல்வன் துயரம் பொறாத புலவர் மனைவி,

"கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—யிரவினை
உள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ"!

(நாலடியார்)

"ஆவிற்கு நீரென்றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்" (திருக்குறள்)

என்றுகூறிய இரத்தலின் இழிவை இனி துணர்ந்திருந்த தனது கணவராகிய புலவரை, மகவின் துயர்நோக்கி அதனை இதுசமயம் விடுக்குமாறு நிரம்பவேண்டினள். படிக்காசு அதற்கு ஒருவாறுஉடன்பட்டு,இரப்போர் இன்முகம் பார்த்து பரிசுதவும் ஈகையாளர் அந்நாட்டில் அப்போது யார் உளாரென அண்மையில் இருப்போரை உசாவினர். அவர்களிற் சிலர், தொண்டைநாட்டுச் செங்கற்பட்டுக்கு நான்கு மைல் தூரத்தில் "வல்லம்" என்னும் ஊரில் "காளத்தி" என்னும் வேளாண் செல்வர் சிறப்புடையவரும், ஈந்துவக்கும் இன்

குணத்தினர் எனவும் சொல்லினர். வேளாளர் என்பவர், என்றுங் காப்பாளர் என்ற உறுதிமேற் கொண்டு கணமுந் தாழ்க்காது, தமதூர்க்குச் சமீபமானதால், அப்பொழுதே அவரைக்காணப் பிரயாணப்பட்டு *வல்லைமாநகர் சேர்ந்து, செல்வரது திருவுள்ளத்தில் எளிதில் பதிந்து மனமுருகிப் பரிசுதரும் வகையில் இனிய கவியொன்று புனைந்துகொண்டு பிரபுமுன் சென்றனர். அங்ஙனம் வந்த புலவரைப் பிரபு நோக்கி நீவிர் யாவரென வினவினர்? புலவர்,

"பெற்றாள் ஒருபிள்ளை என்மனையாட்டி அப்பிள்ளைக்குப் பால்
பற்றாது கஞ்சி குடிக்குந்தரமல்ல பால் இறக்கச்
சிற்றாளும் இல்லை இவ்வெல்லா வருத்தமுந் தீர ஒரு
கற்றா தரவல்லையோ வல்ல மாநகர்க் காளத்தியே"

என்னுங் கவியை அவர்தம் இனிய செவியில் அமுதமெனப் பெய்தனர். அதுகேட்ட தமிழறிவுடைய அப் பிரபு, பாட்டின்கண் தமது வறுமை நிலையைத் தெளிவாகச் சித்திரம்போல் விளக்கிய புலவரின் கல்வித்திறமைக்கும், கவியமைப்புக்கும் மிகவியந்து, அவரது வறுமைக்கு இரங்கி மேலும் நல்குரவால் நலியாவண்ணம், பல கரவைப்பசுக்களும், அப்பசுக்கள் ஒவ்வொன்றுக்கும், மேய்ப்போன், கறப்போன், பாலடுவோன் முதலான ஆட்களும், போதுமான பொன்னுந் தந்து புலவரை உபசரித்தனன். இச்செய்

* இச்சிற்றூர் கல்வெட்டுக்களில் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க்கோட்டத்து வல்லநாட்டு வல்லம் எனக் காணப்படுகிறது. (Ep—186 of 1892.)

தியையே பின்னர்தாம்பாடிய தொண்டைமண்டல சதகம் 52-ஆம் செய்யுளில் அழகுபெற விளக்கியுள்ளனர். அப் பாடல்,

"கொல்லையிற் பாற்பசு மேய்ப்போன் கறப்பவன் கொண்டு [சென்றே
யெல்லையிற் சேர்ப்பவன் பாலடு வோனிவை யித்தனையுஞ்
சொல்லையிற் பாவல னோரோர் கவிசொல்லச் சொல்லநல்கும்
வல்லையிற் காளத்தி வாழ்வா னதுந்தொண்ட மண்டலமே".

என வருவதாம். இங்ஙனம் காளத்தியார் தமது வறுமை யறிந் துதவிய பசுக்கொடைக்கு மிக்க மகிழ்ந்து மீண்டும்,

"*வழிமேல் விழிவைத்து வாடாமல் என்மனையாளை மற்றோர்
பழியாமற் பிள்ளையும் பால் என்றழாமற் பகிரெனுஞ் சொல்
மொழியாமலே விட்ட பாவை முசித்துச் சதை
கழியாமல் ஆ அளித்தாய்வல்லமா நகர்க்காளத்தியே."

(தனிச்செய்யுட் சிந்தாமணி)

"நற்றே ரணவீதி நண்ணும் வல்லைக்காளத்தி
கற்றோர் தமக்களிக்குங் கையேகை—மற்றோர்கை
வேங்கை யலகை முகை வேட்கை பலகை நகை
காங்கை யழுகை விழுகை".

எனவருங் கவிகளாற் புகழ்ந்து பாடிப் பிரபுவாற் பிரியாவிடை பெற்றுத் தம்மூர் சென்று துன்பின்றிச் சின்னாள் வாழ்ந்து வந்தனர்: இவர் இப்பிரபு மீது பாடினரென்பதற்குத் தாம் பாடிய சீட்டுக்கவியின் அடிகளில் ஆதாரங் காணப்படுகிறது. அது,

* * *

* 'என்னை வரவிட்ட' என்பது பாடபேதம்.

"காளமேகம் போலவே வசைபாட யாமுமிக்
காசினியில் அவதரித்தோம்
காளத்தியப்பன் மேற் கவிகளையும்
மேலுமுள கவிகளையும் அறிந்திலையா".

என்பதாம்.

இவ்வுண்மை யிருக்கச் சிலர், இக்கவிகள் பாடினோர் "திருக் குறுங்குடி நம்பி" என்னும் புலவர் என்று கூறுகின்றனர். உண்மை ஆராயற் பாலதாம்.

## தொண்டைமண்டல சதகம் பாடியதும்—
## சிவிகை சுமக்கப்பெற்றதும்.

இங்ஙனம் புலவர் வாழ்ந்து வருகையில் பஞ்சபூத ஸ்தலங்களில் பிருதிவு ஸ்தலமாகிய காஞ்சிபுரத்திற்கு அணித்தாயுள்ள "மாவண்டூர்" என்னும் சீரூரில், கல்வியிலும், செல்வத்திலும், காணிவளத்திலும், கனத்திலும், பிரபுத்வத்திலும் பிரசித்திபெற்று, கத்தூரி முதலியார் புதல்வராய 'கறுப்ப முதலியார்' எனும் கண்ணியர், வேளாண் மரபிற்கு அணிகலனுய்ச்சிறந்து விளங்கினர் இப்பெரு நிதிக்கிழவர். தென்களந்தையில் 'படிக்காசு' என்னும் பெயரியபுலவர், அருந்தமிழ்ப்பாக்களைத் தேனும் துவர்க்கத் தீம்பாலும் புளிக்கச் செழுங்கனிச் சுவையுங் கைக்குமாறு கவிபாடும் வாக்குடையாரென அறிஞர் பல்லோராலுங் கூறக்கேட்டு அதிசயித்தவராய், அத்தகைய விழுப்புலமையுடைய பாவலரைக் கொண்டு, தொண்டை நாட்டின்கண் தோன்றிய அரசர்கள், வள்ளல்கள், பிரபுக்கள், அரனடியார்கள், புலவர்கள், வித்தகர், விளங்குபுகழுடையோர்களையும், மற்றும்மூர்த்திகள், தலங்கள், தீர்த்தங்கள், நூல்கள் முதலியவைகளையும், பின்னும் விசே

டங்கள், விம்பிதங்கள் பலவற்றையும் சேர்த்து ஒரு நூலாகத் தொகுத்துப் பிற்காலத்தோர் உணர்ந்து மகிழ்ந்து ஒழுக்கந் திருந்தி உயருமாறு பாடச்செய்யவேண்டுமென நெடுநாள் தம்முட் கொண்டிருந்த கருத்தைப் புலவரைக்கண்டு விவரப் பட அறிவித்து நூல் இசைக்குமாறு வேண்டினர். புலவரும், பிரபுவின் விருப்பமிக்க வேண்டுகோளின்படி, "தொண்டை மண்டல சதகம்" என்னும்பெயரில் 100 செய்யுள்கொண்ட தொகையில், கட்டளைக் கலித்துறைப்பாவினத்தில் சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, ஓசை யுடைமையாதிய பத்தழகும் பொருந்தச் செழும்பிரசம் ஒழு கிய செஞ்சொற்கள் இனிது விளங்கப் பாடிப் பிரபுவுக்கறி வித்தனர். பிரபு நன்றெனக்கொண்டு மாவண்டூரில் தம்மர பினரையும், பிறரையும், பெரியோரையுங்கொண்டு ஒரு பெருஞ்சபை கூட்டிப் பிரபந்தத்தை அரங்கேற்றுமாறு சொல்ல, புலவர் சபையில் தோன்றி அங்கு வீற்றிருந்தார் அனைவரையும் தமது வளங்கெழுமிய கவிகளின் இனிமையால் இன்பக்கடலுள் மூழ்குமாறு பிரபந்தத்தை அரங்கேற்றி முடித்தனர். அவையில் கூடியிருந்தார் அனைவரும், ஒருதலை யாக நூலில் ஒவ்வொரு பாக்கள்தோறும் சொற்சுவையும், பொருள்சுவையும், இனிய பழத்தின்சுவை எங்கும் பரந்தி ருத்தல்போல நிரம்பி யிருக்கின்றனவென்றும், உயர்ந்தகுறிப் புக்களும், சந்தநலமும், சரித்திரங்களைத் தன்னகத்தே அடக் கிக் கொண்டிருக்கின்றனவென்றும், அவைகளின் அருமை பெருமைகள் மிகவும் அதிசயிக்கத்தக்கனவென்றும், பெரு மைப்படப்பேசிச் சிரக்கம்பமும் கரக்கம்பமும் செய்து களிப் புற்றனர். இதுகண்ட பிரபுமெத்த மகிழ்ந்து, புலவர் தா

தகுதிக் கேற்ப மிகுதியான பொன்னும், பொன் பட்டாடைகளும், பெரும் பூஷணங்களும் சிறக்க நல்கிப் போதா வற்றிற்குப் புலவரைச் சிவிகைமீதேற்றித் தாமும், தமது சகோதரருமாக அச்சிவிகையைச் சுமந்து ஊர்வலஞ் செய்வித்துப் பெருமைப் படுத்தினர். இவ்வுண்மை அடியிற்காணும் செய்யுட்களால் நன்கு அறியலாகும். அவை:—

1. "கன்மாரி காத்த முகிற் கத்தூரி யருண் மாவைக்
கறுப்ப னென்னு
மின்மாரி தனது கிளை யத்தனையுஞ் சபை கூட்டி
வியந்து கேட்டுச்
சொன்மாரி பொழிந் திடவே சிரகரகம் பிதஞ்செய்து
சுருளுந்தந்து
பொன்மாரி பொழிந்து தந்தப் பல்லக்குச் சுமந்து மிகு
புகழ் பெற்றனே."

2. "கூடுந் திரைகொண் டிவன் வேளை பார்த்துக்
குறுகலர்கள்
தேடுந்தென் மாவைக் கறுப்ப னெங்கோ னெஞ்
சிவிகைதனைப்
பாடுந் தமிழ்ப் பெரு மானெட்டக் கூத்தன்
பதாம் புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனைப் போலச்
சுமந்தனனே."

3. "[1]எல்லப்பன் அம்மையப்பன்தரு[2]திருவேங்கடநாதன் எழிற் [3]சீராமன்
வல்லக்கொண் டையன் [4]மாதை வேங்கடேசுரன் போல வரிசை செய்தான்
செல்வத்தம் பியருடனே கத்தூரி மகன் கறுப்பன் தெருவீதிக்கே
பல்லக்குத் தான்சுமந்தா னதுநமக்கோராயிரம் பொன் பரிசுதானே."

4. "காவைவென் றிடுகத் தூரி கண்மணி கறுப்பனென்னும்
மாவையம் பதியான் தொண்டை மண்டல சதகங்கேட்டு
நாவலர் புகழ்ந்துமெச்ச நவநிதி பொழிந்து நன்றாய்ப்
பூவுலகெங்கும் போற்றப் புகழ்நிலை நிறுத்தினனே."

5. "இந்தச்சதகம் அரங்கேற்று கைக்கிசைந் தேன் எவரும்
வந்திக்கும் மாவைக்கத் தூரிக் கறுப்பன் வளமைபெறு
புந்திக் குலாவுநள் ளாறர்தம் பாதம் பொருந்துமன்பன்
வந்துற் பவிக்க மகிழ்வா னதுந்தொண்டை மண்டலமே."

என வருவனவேயாம்.

---

1. எல்லப்பன் என்பவன் குன்றையூர் வேளாண பிரபு. 2. இப் பிரபு இன்னாரென்று தெரியவில்லை. 3. இதுவும் அப்படியே. 4. இவர், மாதை என்னும் திருவாமாத்தூரில் அந்தணர் மரபில் ஸ்மார்த்த வகுப்பிற் பிறந்தவர்; கல்வி, அறிவு, ஒழுக்கம், புகழ் முதலியவற்றான் சிறந்து கி. பி. 168?-ல் மதுரையை ஆட்சிபுரிந்த ரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாய்க்கருக்கு மந்திரியாகத் திருநெல்வேலியை ஆண்டவர். புலவர்க்குப் பெருநிதியாய் விளங்கியவர். பணவிடு தூதுமுதலிய பிரபந்தங்களாற் சிறப்பிக்கப் பெற்றவர். தமது ஆசிரியர் கட்டளைப்படி **பிரபோதச்சந்திரோதயம்** முதலிய நூல்கள் இயற்றி உலகுக்கு உதவியவர், படிக்காசுப் புலவராலும் தமதுகொடை மடத்தைப் புகழ்ந்துபாடும் பெற்றி மிக்காருமாவர்.

மேற்குறித்த ஐந்து பாடல்களில், கறுப்பமுதலியாரவர்களின் கொடைப்பெருமையும், தமிழறிந்து தகுதிகாட்டிய தன்மையும், நிறைகுணச் செம்மையும், இனிய சுபாவமும், அவர்தம் அருமைச் சகோதரர் தமையன் கருத்துவழி செல்லும் நேர்மையும், அழகுற அமைந்துள்ள அருமை பாராட்டற் பாலதே.

புலவர் இத்துடன் அமையாது, தம்மை நன்குபசரித்த பிரபுவைத் தமது நாவாரப்புகழ்ந்து அன்பின் மிகுதியை விளக்கிக்கூறிய அரும்பாடல், அவர் பேரன்பையும், நன்றியறிதலையும் நன்கு காட்டவல்லது. அதுவருமாறு:—

**"ஓர் கறுப்புமில்லாத தொண்டைவள நாட்டில் உசித வேளைச்**
**சீர்கறுப்பொன் றில்லாத கத்தூரி மன்னன் அருள்சேயைப் பார்மேல்**
**ஆர்கறுப்பன் என்றுசொல்லி அழைத்தாலும் நாம் அவனை அன்பினாலே**
**பேர்கறுப்பன் நிறஞ்சிவப்பன் கீர்த்தியினால் வெளுப்பனெனப் பேசு**
**[வோமே."**

தொண்டை மண்டல சதகத்தின் இனிய சில பாடல்களைத் தமிழன்பர்கள் சுவைத்து இன்புறற்பொருட்டும், மாதிரிக்குமாக இதன்கீழ்த் தருகின்றோம். அவைகள் வருமாறு:—

"சீர்கொண்ட கச்சித்திருவேகம் பத்தரன் செல்வமுக்கட்
கார்கொண்ட மும்மதத் தைங்கரந் தாங்கிக் கடவிகடப்
பேர்கொண்ட சக்கரப்பிள்ளையைத் தான்பெற்ற பேறதனால்
வார்கொண்ட கீர்த்தி படைத்ததன்றோ தொண்டை
[மண்டலமே" (1)

"சேணார் கழுகு பழகுதெய் வீகச் சிறப்புமன்றி
யேணாரும் பூதங் கொடுபோ வதுமன்றி யெண்ணிரேல்சீர்க்
காணாது காண்பது கச்சியி லே'யென்று காசினியோர்
வாணாளளவுந் துதிப்பதன்றோ தொண்டை மண்டலமே" (5)

"தாயினும் நல்ல தயையுடையோர்கள் தமதுடலம்
வீயினும் செய்கை விடுவர்கொல்லோ? தங்கள்மெய் முழுதும்
தீயினும் வீழ்வர் முதுகினும் சோறிட்டுச் சிறரவின்
வாயினும் கையிடுவாரவர் காண்தொண்டைமண்டலமே"(14)

"கேட்டாலும் இன்பம் கிடைக்குங் கண் டீர் கொண்ட சீர்த்தி
பாட்டா லுயர்ந்த புகழேந்தி சொன்ன படியறிந்து [யொடு
பூட்டார் சிலமன்னன் வையம் பெறினும்பொய் தா னுரைக்க
மாட்டார் எனச்சொன்ன நாட்டார் திகழ் தொண்டை
மண்டலமே" (17)

"துரைத்தியாக ராயர்முன் சுந்தரர்க் காவொரு தூதுசென்ற
விரைத்தா மரைமணம் வீசுதல்போல் விடப் பாய்சுருட்டித்
திரைத்தா வணத்தில் ஒருபுல வோன்பின்பு சென்றசெந்தா
மரத்தாண் மணமின்ன நாறுங் கண்டீர் தொண்டை
மண்டலமே" (29)

## ஸ்ரீ சிவாகாமி யம்மையைத் தரிசித்ததும்—
## படிக்காசுப் பெயர்பெற்றதும்.

தொண்டை நாட்டுப்பிரபுவும், தமிழ்ப்பேணும் தண்ணளியுடையாருமாகிய கறுப்பமுதலியார், தந் தகுதிக்கேற்றபடி செய்த பரிசுகளைப்பெற்ற படிக்காசுபுலவர், அப்பிரபுவிடம் பிரியாவிடைபெற்று அப்பெரும் பரிசுகளுடன்

தமது ஊராகிய களந்தைக்கேகி வருத்தமின்றிச்சந்தோஷமாய் வாழ்ந்து வருகையில், சிவதல யாத்திரைசெய்து சிவபெருமானைச் சேவித்தும், தக்காரையடுத்துத் தமிழ்ப்பாடிச் சன்மானம்பெற்றுத் தமது புலமையையும், புகழையும் தமிழ் நாடெங்கும் பரவவும் செய்யவேண்டுமென்ற எண்ணம் உண்டாக, அதனை, மனைவிபாலறிவித்து விடைபெற்று நன்னாளொன்றில் பிரயாணமாகி முதலில், நினைப்போர் நெஞ்சிலும், நாக்கிலும் அமுதம் ஊற்றெழும் தன்மைத் தாயதும், 'தேங்கு நீர் வயல்சூழ் தில்லைக் கூத்தனைப் பாங்கிலாத்தொண்டனேன் மறந்துய்வனோ' என்னும் திருப்பாசுரத்தால் புகழ்ப்பெற்றதும், 'தில்லைதில்லை யென்றால் பிறவி யில்லை யில்லையென்று மறைமொழியும், தொல்லை தொல்லையென்றே கொடுவினை வல்லைவல்லை யென்றகலும்' எனும் ஆப்தர்மொழிக்கு இலக்காகியதும்; பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய ஆகாச லிங்கத்திற்கு உறைவிடமானதும், அறிந்தார் அனுபவிப்பதும்; அறியாதார் அறிவைப் பெறுவதும்; மணிவாசகனாரும், சேரமான் பெருமானும் முறையே "திருச்சிற்றம்பலக் கோவை"யும், "பொன் வண்ணத்தந்தாதி"யும் பாடிய பழம்பதியும் ;

"கரத்தால் தொழுதிடினுங் கண்டிறைஞ்சி னாலுஞ்
சிரத்தால் வணக்கஞ் செயினும்—உரைத்திடினும்
தில்லைக்கப் பால்நின்று சேவித்தா லுஞ் சனனம்
எல்லைக்கப் பால்நிற்கு மே"

என்றமேன்மை பெற்றதுமான சிதம்பரத்தையடைந்து சிற்சபையெய்தி, ஆங்கு ஞானப் பெருவெளியில் ஐந்தொழில் நடனம்புரியும் ஆனந்தத்தாண்டவரையும், அம்மை சிவகாமியாரையும் கண்பெற்ற பேறாகத் தரிசித்துக் களிப்பின் மிகுதி

யால் செஞ்சொற்கவி சிலபாடினர். சபாநாயகரைத் தரிசித்த போது, தமதுள்ளத்தில் மூர்க்கர் செய்கைகள் மிக முனைந்திருந்ததனால் அவர்தம் குணங்களே அக்கவியில் அமைவதாயிற்று. அக்கவி வருமாறு:---

"பொல்லாத மூர்க்கருக்கெத்தனை தான்புத்தி போதிக்கினும்
நல்லார்க்குண் டான குணம்வருமோ? நடு ராத்திரியிற்
சல்லாப் புடவை குளிர்தாங்குமொ? நடுச் சந்ததனிற்
செல்லாப் பணஞ்செல் லுமோ? தில்லை வாழுஞ்சிதம்பரனே."

தேவியை வணங்குகையில் மனங்கரைந்து மகிழ்ச்சிமிகக் கூர்ந்ததால், அன்பு ததும்ப அவரைநோக்கி,

"வேல்கொடுத்தாய் திருச்செந்தூரர்க் கம்மியின் மீதுவைக்கக்
கால்கொடுத்தாய் நின்மண வாளனுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத்தாய் மதவேளுக்கு மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத்தாய் அன்னையே! எனக்கேதுங்கொடுத்திலையே"

என்னும் இனியகவியை வாய் மணக்கப்பாடினர், பாட்டுக்குவந்தருளும் பரமேட்டி புலவரின் அன்பின் பெருக்கினையும், அமையாக்காதலையுங் கண்டு உண்மையடியாரிடத்துத் தமக்கு எப்பொழுதும் பேரன்பு உளதென்பதை உணர்த்தற்பொருட்டுப் பஞ்சாட்சரப்படி மீது ஐந்து பொற்காசுவைத் தருளினர். அதுகண்ட புலவர், தேவியின் திருவருட்டிறத்தை வியந்து ஆனந்தவாரிதியில் ஆழ்ந்தி அவற்றைக் கைக்கொண்டு அத்தலத்தே சிறிதுகாலம் தங்கியிருந்தனர். அதுமுதல் அவருக்குப் "படிக்காசுப் புலவர்" என்றுபெயர் வழங்கத்தொடங்கிற்று.

அருட்புலமைவாய்ந்த இவர், பிறரைப் பாடிப் பிழைத்தல் இவர்தந் தகுதிக்கேற்றதல்லவெனச் சிலர் கூறுவர். ஆயின், எவர்க்கும் வினையூட்டாது கழியாதாதலால், அவ்வினைக்குப் புலவரும் ஈடுபட்டவரானதால், அது கழியுந்தனையும் பிரபுக்களைப் பாடிநாள் கழித்துப் பின்னர் தமக்குப் படிக்காசருளிய தில்லை சேர்ந்து அக்கடவுளுக்கே தொண்டுபுரிந்து முடிவில் முத்திவீடு சேர்ந்தாரெனக் கொள்ளுதலே நேரிதாம்.

## குடந்தை விஜயமும்—கும்பகவியும்.

தில்லை நகரில் சிறிதுகாலம் கழித்தபின், புலவர்க்குக் குடந்தைக் காரோணம், குடந்தைக் கீழ்க் கோட்டம், குடமூக்கு என்ற காரணப்பெயர்கள் சிறந்ததும், சமயாசார்யர்களால் தேவாரம்பெற்றதும்; பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை மாசிமகத்தின்போது கங்கைவரும் ஐதீகத்தால் அதிக சிறப்படைந்த மாமகத்தீர்த்தத்தை யுடையதும், காசி விஸ்வநாதர், நாகேஸ்வரர், கும்பேஸ்வரர்முதலிய சிவமூர்த்தங்கள் சிறந்து விளங்குவதுமான கும்பகோணத்தைத் தரிசிக்க அவாவுண்டாக அத்தலத்திற்கு எழுந்தருளினர். அப்போது அத்தலத்தில் கவிபாடுவதிலும், கல்விப்போர் செய்வதிலும் சிறந்தபுலமையும், திறமையும் வாய்ந்த கும்பன் என்னும் பெயர்வாய்ந்த கம்மியப்புலவர் பிரசித்தராயிருந்து வந்தனர். வந்த அவர், படிக்காசுப்புலவர் குடந்தைக்கு விஜயமா யிருப்பதையுணர்ந்து, அப்புலவரோடு கல்வி விஷயமாகவும், கவிபாடும் வகையாகவும் வாதுசெய்யப் படிக்காசுப் புலவரை அடுக்க, அதனால் இருவருக்கும் விரோத முண்டானதாக அப்புலவர்களது சீட்டுக்கவிகளால் தெரியவருகிறது. அப்பாடல்களை வேறோர் தலைப்பில் காண்க.

இனி இவர், இங்குநின்றும் நீங்கி இன்னதலத்தை அடைந்து வழிபட்டார் என்றும், இன்னது செய்தாரென்றும் விவரமாதியன தெரிந்துகொள்வதற்கில்லை. பின்னர் கூறப்படும் செய்திகளால், புலவர் திரிசிராப்பள்ளியை அடுத்ததும், தமிழபிமானஞ் சிறந்ததும், புலவர்களது புலமைத்திறமறிந்து அவர்தந்தகுதிக் கேற்பச் சன்மானிப்பதும், ஈந்துவக்கும் இன்பமே பொருள்படைத்ததின் பயனென்பதை இனிதுணர்ந்ததும், நிலவளமும், நீர்ப்பெருக்கும் நிறைந்ததும், "முத்துவிஜயரங்க ஒப்பிலாத மழவராயர்," "குமாரவிஜய ஒப்பிலாதமழவராயர்" என்னும் பட்டப்பெயர்கள் புனைந்த பாளையக்காரரால் ஆளப்பட்டதுமான "அரியலூர் ஜமீன்" சமுகம்சென்றார் என்பதற்கும், அங்குநின்றே கொங்குநாட்டு யாத்திரை செய்யத்தொடங்கினர் என்பதற்கும் சில ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவைபோன்ற சிற்சில குறிப்புக்களைக் கொண்டு இப்புலவர் சரிதத்தை ஒருவாறுமுடிக்க வேண்டுமேயன்றி முற்றிய சரிதமாகக்கூறுவதற்கில்லை. நமது நாட்டுப் புலவர்கள் சரிதம் அனைத்தும் இவ்வாறே அமைந்துள்ளன என்பது சரிதப்பரிசீலனை செய்வார்க்குத் தெற்றெனத் தெரிந்த விஷயம்.

## சீட்டுக்கவிபாடியதும்—செம்பொன்னுயிரம் பெற்றதும்.

இவர், கும்பகோணத்தினின்றும் அப்படியே ஆடுதுறைவழியில் அரியலூர் ஜமீன்தாரைக்கண்டு தமிழ்பாடிப் பரிசுபெற அங்குச்சென்றனர். அப்போது அங்கு ஜமீன்தாராய் இருந்தவர், "லட்சுமண மழவரங்கன்" என்னும் பெயரினர், கொடைக்குணஞ்சிறந்து யாவர்க்கும் இனி

யராயும், தமிழையும், தமிழ் கற்றோரையும் நன்குபோற்றியும், பேணியும் வந்ததன்றி தமிழ்க்கலா விநோதராகவும் விளங்கி வந்தனர். இதனால் தமிழ்ப்புலவர்கள் ஆங்கு குழுமி நாடோறும் நவ நவமாய்த்தேனினும் இனித்த செந்தமிழ்க்கவிகள் பாடிவருவர். தமிழும் தலை சிறந்து ஓங்கிவளர்ந்தது. அரியலூர், தமிழ் மடந்தை தனி நடம்புரியும் பொற்றடமாகப் பொலிவுற்றது. மழவரங்கபூபதி, கற்றோர் நேசத்தைப்போலச் சுவர்க்காநுபவம், தத்துவ ஞானத்துக்கும், முத்திபெறுவதற்கும் ஏது வாகாததினால், கற்றவர்களோடு சிநேகித்து அநுபவிக்கும் ஆனந்தம், சுவர்க்காநுபவத்தாலுண்டாகும் ஆனந்தத்தினும் அதிகமென்பது கருதி அறிவுடையோர் குழாத்துடன் கூடி அளவளாவி இன்பவாரிதியில் திளைத்திருந்தனன். இவன் இங்ஙனம் தமிழாதரிப்புடன் தமிழ்ப்புலமையும் பெற்றிருந்தானென்பது அடியில்வரும் தனிநிலைக்கவியாலும் அறியப்படுகிறது.—

"தென்னரங்கன் தூங்கனென்பார் வாய்திறவான் கண்விழியான்
[திரும்பிப்பாரான்
என்னரங்கன் துங்கரங்கன் ஏழையற்பாற் கருணையுடன் இரங்காரங்கன
மன்னரங்கன் தமிழ்ப்பெருமான் மழவரங்கன் அளித்தருளும்மைந்தனை
குன்னரங்கா வெனக்கிரங்காய் கொண்டுவந்த தமிழ்க்கிரங்கிக்
[குழைந்தெழாயே"

(பாடிய புலவர் பெயர் தெரியவில்லை)

தமிழ்ச் சுவையுணர்ந்த இப்பெருஞ்செல்வரைப் போலவே மற்றைய பாளையக்காரர்களும், தண்டமிழ் மங்கை தளரா வகை இனிதுறப்பேணி, எழில்பெறச்செய்ய முன் வந்திருப்

பின், நந்தனித்தமிழ்தேவி தனது இயற்கை நலத்தாலும், செயற்கை யணியாலும், தமிழ் நாட்டையே யன்றித் தண் கடல்வரைப்பையும் தன்னடிப்படுத்துவள் என்பதற்கு ஐய முண்டுகொல்? மென்மையிலும், இயற்கை நெறிவழா ஓசை யின்பத்திலும், இயல்வரம்பிலும், தனித்துநிற்கும் ஆற்ற லிலும், கன்னித்தன்மையிலும், தமிழைப்பொருவும் மொழி யும் உளதோ?

இங்ஙனம் தமிழ்ப்பெருமையையும்,பேணுதலையும் பெரி துணர்ந்த பிரபுவைக்காணப் படிக்காசர் அங்குசென்றது அதி சயமன்று. புலவர் அரியலூர் சென்றதும் நேரே பிரபுவைக் காணாது, வேறோரிடத்துத் தங்கியிருந்து சமயத்தை எதிர் பார்த்திருந்தனர். இவர்க்கு முன்னரே அரியலூர்வந்து அச்சமுகத்திருந்த கும்பன் (குடந்தை) என்னும்புலவர், அரியலூர் ஜமீன்தார் மழவரங்கனுக்குத் தாம் எழுதியசீட்டுக் கவியில், படிக்காசர் பால், தமக்குள்ள பகைமையையும், அவ ரைத் தாம் முன்னரேவென்றுள்ள செய்தியையும் குறிப்பிட் டுள்ளாரென்றும் புலவர், தக்கோரால் கேள்வியுற்றிருந்தனர். அப்புலவரின் சீட்டுக்கவி வருமாறு:---

"கொஞ்சுகவி யானையை வசைக்கவி யெயிற்றினாற்
குகவியுயி ரான்மருட்டும்
குடிலகவி ராஜசிங் கங்களைப் பங்கஞ்செய்
கும்பசர பத்திநேலை
செஞ்சிவிஜ யாபுரிக் கோட்டைக் கபாடம்
திறக்குங் களிற்று வேந்தன்
திறல்கொண்ட *லட்சுமண ரங்கமழ வேந்த்ரதுரை
ஜெய சௌர்யன் இனிது காண்க
வஞ்சியர்கள் இதயமும் கொஞ்சுபுர வியின்மனமும்
வல்லகவி ராசர் மனமும்

* நட்சத்திரப் புள்ளியிட்ட அடிக்குறிப்பிற்குரிய விஷயத்தை 33-ம் பக்கத்தின் கீழ்க்காண்க.

மகிமைபெறு மூர்த்திக்கும் அறிவரிது நின்சமுகம்
வருமுனே யறிசதுர நீ
* பஞ்சகலி காலப் பயங்கரன் தொண்டமான்
பதியி லவமான மாக்கிப்
பஞ்சலட்சண மெனுங் கசைகொண் டடித்துப்
படிக்கனை முடிக்கி ஞேமே.''*

என்ற இச் சீட்டுக்கவியை ஒருவர் காட்டக்கண்டபடிக்காசர், அதனை ஒரு பொருட்படுத்தாது தாமும் ஓர் சீட்டுக்கவி வரைந்து தமது கற்றுச் சொல்லியின் மூலம் பிரபுவுக்கு அனுப்பினர். அக்கவி வருமாறு:—

''கொல்லத் தமிழ்க்கவி செலுத்திவாய் வீண்பெற்ற
கும்பனெனு மொரு தந்தியைக்
கொத்தியுண் டுமிழுண்ட பேரண்ட மென்னவரு
கூர் படிக்காச ஞேலை
வல்லச் †சிவந்தெழும் பல்லவன் றன்கருணை
மாரி போலே வழங்கும்

---

* இச்சீட்டுக்கவிப்படி 13,14,15,16-ஆவது அடிகளால் புலவரிருவருக்கும் மூண்டபகை நேர்ந்திருப்பதாக அறியப்படுகிறது. அதன் வரலாறுமட்டும் அறியக்கூடவில்லை.

† இத்தொடரிற்குறித்த 'சிவந்தான் பல்லவன்' என்பவன் மழவரங்கனது சமகாலத்தவனென்றும், பெருங்கொடைப் பிரபுவென்றும், '[illegible]கோடை' என்னும் ஊரினன் என்றும், 'தமிழ் நாவலர் சரிதை' 186, 187-ஆம் வெண்பாக்களாலும், 'தனிச்செய்யுட்கோவை' செய்யுளொன்றாலும் அறியப்படுகின்றன. அப்பாடல்கள் அடியில் வருமாறு:—

வெண்பா.

''என்னெஞ்சு பெண்விழியுங் கொண்டோ விலங்கேசன்
பொன்னணு சிகாமணியும் பொன்முடியும்—வன்னெஞ்சுஞ்
சிந்த கோடைச் சிவந்தான் தென்கோடை யார்கழக்கும்
பந்துஞ் சாதித்த படி''

வெண்பா.

''கண்டு பணியக் கடவேனோ காதலுடன்
தொண்டை யிசழுந்த தாய்வேனோ—கொண்டற்
கோடைச் சிவந்தான் கோடைக் குளிர்காவி லன்ன
கடைச் சிவந்தா னென்செய்வே னன்''
(கவிதலைவி கூற்றாகக் கூறியுள்ளது)

"குளக்காவி மலர்த்தொடையான் சிவந்தெழுந்த பல்லவனைக் [கூடா நாளில்
இளக்கார மோபிரிந்த வாறுகண்டோ நானேழை பென்றுதானோ
வுளக்காத தூண்டுகோல் பனிநீர்நெய் யானுறங்கு மூசனல்ல
விளக்காக வெனைத்திரியா விடியமட்டும்எரித்ததையேவெண்ணிலாவே."

(பாடியபுலவர் பெயர் தெரியவில்லை)

---

வாழ்வைக் கெடுக்கவரு தென்குடந் தைப்பதிக்
கொள்ளி வாய்ப் பேய்களல்ல
புல்லத் துரைத்தன ரெனும் பனிபி னிடையிலே
புகுபரிதி நிகர் என்னவே
புகழ்கொண்ட லட்சுமண * ரங்கமழ வேந்த்ரதுரை
பூபன் எதிர் கொண்டு காண்க.

* * * * *

* * * * *

என்பேரி லபசாரம் உண்டெனத் துதிசெய்ய
எனைவர வழைத் திடுவையே"

(இரண்டடி சிதைந்துள்ளன.)

---

* பெருவரிசை யளித்தப் புலவர்களைப் பேணிவந்த இப்பிரபுவின் மீது ஒரு பாவலன் வசைக்கவியொன்று பாடியிருப்பதாகத் தெரிகிறது. அப்பாடல் வருமாறு:—

"தள்ளிக்கேன் முள்வேலி கழுதைக்கேன் கடிவாளங் களைப்பில்லாத
உள்ளிக்கேன் பரிமளங்கள் உவர்நிலத்துக் கேன்விதைகள் ஒடித்துப் [போடும்
சுள்ளிக்கேன் கோடாலி துடப்பத்திற்கேன் மேற்கவசம் சும்மாபோகும்
பள்ளிக்கேன் அதிவீர மழவரங்க பூபனெனும் பட்டந்தானே."

இதன்பின்னர் நிகழ்ந்த விஷயங்களொன்றும் அறியக்கூடாதவாறு மறைவு பட்டிருக்கின்றன. பின்னர்வரும் படிக்காசுப்புலவர் பாடலொன்றால், மழவரங்க பூபன், புலவர்தந் தகுதியறிந்து சன்மானியாது குறைந்த பொருள் அளித்தபோது படிக்காசர், அதனைப்பெறாது மறுத்து, அவர் மனம் பரிந்துருகுமாறு,

"* கனத்தசிராப் பளிதனிலே வடுகர் கூத்துக்
கட்டியா ளுவதாச்சுத் தஞ்சாவூரோ
முனைத்தமரா டியகாடு மிஞ்சிப்போச்சு
முனையும்போம் மூக்கும்போம் மைசூர்ப்பேச்சு
பினற்றுறையூர் காய்ச்சலாம் வடதேசத்துப்
பேய்த்துலுக்கர் உடையாரோ கவிதைகேளார்
இனித்தமிழுக் கரியலூர் என்றிருந்தோம்
இங்குஞ்சம் பளங்குறைந்தால் என்செய்வோமே."

என்றதோர் இனிய செய்யுள்கூற, பிரபு பாட்டின் பதமுணர்ந்து மிகமகிழ்ந்து பின்னும் ஐந்நூறு பொன் கூட்டிக் கொடுக்கப் புலவர்பெற்று, விடைகொண்டார் என்று அறியப்படுகிறது.

---

* இச்செய்யுளை அடியொற்றி மற்றோர் புலவர் தமிழருமை யறியாதாரைப்பற்றி இயங்கிக்கூறிய கவியை மேற்கூறிய கவிக்குச்சான்றாகக் கொள்க. அப்பாடல் வருமாறு:—

"வடுகர்மேற் கவிபாடி லெந்துகோ யீபிடுகு மாகரவமெந்த மாத்ரம்
வாடுகா லேதிபுடு வத்துபோ வோயென்பர் வம்புசெய் துருக்க ரெனிலோ
கடுகடுத் தேயபோ ஜாவோ நக்காவங்கு காய்ககிவி யெனப ரிங்க்லிஷ்
காரர்காட் குட்ஷட் யுவர்மவுத் தென்பர் கனடர் இலிகா வென்பரால்
தொடுகடற்புவியில்மற் றுளபாடை யோர்களும் தோற்றிய படிசக னந்தம்
சொல்லுவா ரவர்க்கெலா மெமதுதமி ழருமையும் சுவையு மறியதற் [கெளியதோ
நடுவுறப் பலகலையில் நீபயின் றவைகளின் நயந்தெரிந்தனை யாதலால்
நற்றஞ்ச மாம் வயிரமுத்திந்த்ரனே நின்னை நாடிவந்தோம் வள்ளலே."

இவர், அரியலூரினின்றும் 'மாந்தை' என்னும் ஊர் சென்று, அவ்வூரில் பிரசித்தப்பெற்ற பெரும்பிரபு "மகா ஜனத்தலைவர்" என்பவருக்கு, முதலில் சீட்டுக்கவியொன்றெழுதிப் பிரபுவின் அநுமதி பெற்றுப்பார்க்கிற அக்கால வழக்கத்தை யொட்டி ஓர் சீட்டுக்கவி எழுதினதாக அறியப்படுகிறது. அக்கவிவருமாறு:—

"தூளிபடவேவந்த கவிவாணர் கவியெலாஞ்
சூரையிடு கவிஞர் சிங்கம்
துட்டநிட் டூரகவி சுப்ரதீ பக்கவி
துரைக்கெலாந் துள்ளு சேட்டு
வாளைகுதி பாய்கின்ற மாந்தைகுடி மேவிய
மகா சனத் தலைவருக்கு
மட்டுலவு சோலைக் களந்தைப் படிக்காசு
வரவிட்ட விஞ்ஞாபனம்
காளமேகம் போல வசைபாட யாமு மிக்
காசினியில் அவதரித் தோம்
காளத்தி யப்பன்மேற் கவிகளையும் மேலுமுள
கவிதையும் அறிந்த திலையா
ஆளனு மிருக்கவே செய்தகரு மங்களுக்கு
அழிவு தேடுதல் ஆகுமோ
ஆகாத காரியம் போகாது வீணிலே
யப்கீர்த்தி நிலை நிற்குமே."

இச்சீட்டுக்கவியில் குறித்த துட்டகவி, நிட்டூரகவி, சுப்ரதீப கவி முதலியோர் இவர் காலத்தில் பிரசித்தியாய் விளங்கிய பெரும்புலவர்கள் போலும்.

## பாடும் பந்தயமும்—பல்லக்கிழந்ததும்.

இவர் இங்கு நின்றும் நீங்கிச் "சந்தம்படிக்காசலா தொருவர் பகரொணாதே" என்ற புகழ்ச்சியை விளக்கும் பொருட்டுக் கொங்குநாடுசென்றுஅங்குள்ள பலதலங்களையும் தரிசித்துக்கொண்டு, அப்போதாங்குள்ள*"கவசை"என்னும் நகரில் தமிழ் கற்றோர்க்குத் தகுதியான பரிசளிப்பதில் பிரசித்திபெற்ற "மசக்காளி† மன்றாடி" என்னும் பெயருடைய கொங்குப்பிரபு ஒருவர் இருப்பதாகக் கேள்விப்பட்டு, அப்பிரபுவைக்கண்டு தமிழ்ப்பாடிப் பரிசுபெற அங்குச்சென்றனர். அப்போது அவரது சபையில் வண்ணக்கவிபாடுவதில் வல்லமைமிக்க புலவர் பலர் சூழ்ந்திருந்தனர். படிக்காசுப் புலவர் சந்தக்கவி பாடுவதில் வல்லாரென அறிந்திருந்ததால், அப்புலவர்கள் ஒன்றுகூடி ஓர் சூழ்ச்சி கருதி மன்றாடியின் திருமுன்னர், வண்ணம் பாடுவதென்றும், அதில்யார்தோல்வியடைகின்றார்களோ அவர்களதுவிருதுப்பொருள்களைவென்றவர் பற்றிக்கொள்வதென்றும், முன்னம் திருவண்ணாமலையில் பிரபுடதேவராயன் சபையில் வில்லிபுத்தூராருக்கும், திருப்புகழ் அருணகிரிநாதருக்கும், அந்தாதிக்கு உரைகூறுவதில் தோற்றவர்காதை, வென்றவர் கொய்வதென்ற சூளின்படி நடந்து கொள்வதென்றும் உறுதிபேசப் படிக்காசரும் சம்மதிக்க, வண்ணக்கவிபாட ஆரம்பித்தனர். அதில் படிக்காசுப்புலவர் தோல்வியுற, வென்றவர் அவரது

---

* இவ்வூர் கோயமுத்தூருக்கு வடக்கில் 11-ஆவது மைலில் கோபிற்பாளையத்திற்கருகில் சர்க்கார் சாமக்குளத்திற்குச் சமீபத்திலிருக்கிறது.

†. மன்றாடி என்பது கொங்குநாட்டு வேளாளர்க்குள் ஒரு பிரிவினர்க்குவழங்கும் பட்டப்பெயர்.

பல்லக்கைப்பற்றிக் கொண்டனர். புலவர் பேசவகையின்றித் தமது ஆடை முதலியவற்றைக்கட்டிச் சுமந்துகொண்டு பாதசாரியாய் நடக்கையில் மிகமனம் வருந்தி,

* "அஞ்சாலி மக்களுஞ் சாணாரும் பாணரும் அம்பட்டரும்
செஞ்சாயக் காரரும் வேசையர் மக்களுஞ் செந்தமிழைப்
புஞ்சாகப்பன்னி யொருகாசுக் கோர்வண்ணம் பாடலுற்றார்
நஞ்சாகப் போச்சுதை யோவென் றமிழ்கொங்கு
[நாடெங்குமே."

என ஒருவசைக்கவிபாடி அவர்களைத் தூற்றிவிட்டு மனதை ஒருவாறு சமாதானஞ்செய்துகொண்டு அங்கு நின்றும் நீங்கிக் காவிரிகடந்து, 'கோடிமாடச் செங்குன்றூர்' என்னும் திருச்செங்கோடு சேர்ந்தனர்.

இவரது பல்லக்கைப் பகைப்புலவர் பறித்துக்கொண்டார் என்பதற்கு கொங்கு மண்டலச்சதகம் 85-ஆம் கவியில் ஆதாரங் காணப்படுகிறது. அது,

"நல்லார் புகழ் மசக்காளி கவசையி னுவினிசை
யெல்லாஞ் சொலிநிலை நில்லாமற் பல்லக்கிரவைப்பற்றிச்
சொல்லா லுயர்ந்த படிக்காசன் கட்டிச் சுமக்கக்கவி
வல்லா ரடித்துத் துறத்திய துங்கொங்கு மண்டலமே"
என்பதாம்.

---

"* அந்தாலிச் சாதியும் வண்ணானுஞ் செட்டியும் அம்பட்டனுஞ்
செஞ்சாயக் காரனும் வேசைச் சுதருந் தினங்கவியைப்
பஞ்சாசத் தூற்றி யரைக்காசுக் கோர்கவி பாடுவதால்
நஞ்சாகப போயிற்றி ராசாக்க ளுக்குச் செங்கணற் கவியே."
என்ற செய்யுளும் சிறிது பாடபேதத்துடன் தனிச்செய்யுட் கோவையில் காணப்படுகிறது.

## பாம்பலங்கார வருக்கைக் கோவைபாடியதும்—தந்தச்சிவிகை பரிசுபெற்றதும்.

தேவியர்க்குச் செம்பாதியளித்து அதனால் 'மாதிருக்கும் பாதியான்' என்றபெயர் சிறந்த அர்த்த நாரீச்சுரர் ஆலயத்தை மலைமேற்சென்று கண்டு தரிசித்து வணங்கிச் சிரத்திற் கூப்பிய கையராய்ச் சந்நிதி முன்நின்று,

"எந்தைவருக! வடகயிலைக்கிறைவா வருக! இசைந்தெளியேன்
சிந்தாகுலமே தவிர்த்தருளச் சிவனே வருக! அறுமுகவன்
தந்தைவருக! எனது குலந்தழைக்க வருகத் தாரணியில்
அந்தமிகுந்த திருச்செங்கோட் டரசே வருக! வருகவே!"

"நன்றுமுன்றும் நினையாமல் நலியும் நாயேன் நவையகற்றி
வென்றாள் பொன்றா வுருவான விமலா! அமலா! மேதினியில்
அன்றுமின்றும் யெவ்வுயிர்க்கும்ஆதாரமுமாய்அங்கமிரண்டும்
ஒன்றாய் நின்றாய்ப் பணிப்பொருப்பில் உமையோர் பாகம்
[உடையோனே."

என்னும் திருப்பதிகங்கள் ஓதினர். மெய்யடியார் மனக்கவலையைத் தீர்ப்பதில் விரைவும் விருப்பமும் மிக்க நாகாசலத்திறைவர் புலவர்மனம் சாந்தியடையும்படி திருவருள் பாலித்தனர். இங்ஙனம் மனம் ஆறுதலடைந்த புலவர், அங்குச் சிலநாள் தங்கிச் செங்கோட்டுத் தெய்வத்தைத் தரிசித்துக் கொண்டிருக்கையில், அத்தலத்திற்கு வடக்கிலுள்ளதும்,

"நான் மன்றப்பண் கோட்டுருகு நல்லான் மடிவழியும்
பான்மடை யீதைய! பல்கலைதேர்—வான்புலவர்
மாருகத் தாற்கடைய வாய்க்கால் எனப்பெருகு
மோரூராம் என்றார் முனம்"

என்று ஒரு புலவரால் புகழ்ந்து பாடப்பட்டதுமான 'மோரூர்' என்னும் பேரூரில், பிரபுத்வமும், தமிழ்ப்பேரபிமானமும், சைவநலமும் சிவநேசமும், கொடைப்பெருக்கும் மிகுந்த **'குமாரசாமிக் காங்கேயன்'** என்னும் வேளாளண் செல்வர், படிக்காசுப் புலவர் திருச்செங்கோட்டில் தாமதித்திருப்பதைக் கேள்வியால் உணர்ந்து, மிக்கமகிழ்ந்து, பெரும்புலவராகிய அவரைக்கொண்டு ஓர் பிரபந்தம் பாடச்செய்ய வேண்டுமென நினைந்து, செங்கோட்டுக்குச்சென்று புலவரைக்கண்டு வணங்கித் தமது கருத்தை அறிவித்துத் தமது மோரூர்க்கு எழுந்தருளச்செய்து அவ்வூரில் கோயில்கொண்டருளும், **'புஜங்க பூஷணர்'** என்னும், பாம்பலங்காரர்மீது ஓர்கோவை பாடும்படி வேண்டினர். புலவர் பிரபுவின் வேண்டுகோளின்படி, 600 செய்யுட்களில் *"**பாம்பலங்கார வருக்கக்கோவை**" என்னும் பெயரில் பிரபந்தம் ஒன்று பாடிமுடித்தனர். காங்கேயர் பிரபந்தத்தின் அருமை பெருமைகளுக்கு மிக்க மகிழ்ந்து, புலவர் தந்தகுதிக்கேற்ற வாறு பொற்றுகிலும், பூஷணங்களும் பூரிக்கத்தந்து, அவர் பறிகொடுத்த பல்லக்குப் போலவே தந்தச் சிவிகையொன்று

---

* சிவபெருமானுக்குப் பாம்பலங்காரர் என்னும் பெயருண்டென்பது திருவாசகம் அருளிய மணிவாசகப்பெருமான் 'திருக்கோவையாரில்' 'நலம்புனைந்துரைத்தல்' என்னுந்தலைப்பில்,

"கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுரு கக்கனிக்கும்
பாம்பலங் காரப் பரன்றில்லை யம்பலம் பாடலரிற்
றேம்பலஞ் சிற்றிடை யீங்கிவ ளங்கனி வாய்கமழு
மாம்பலம் போதுள வோவளிகாணு நகன்பணையே"

எனவரும் செய்யுளால் அறிக.

பரிசு தந்து வழிவிட்டனர். இவ்வுண்மை அடியில்வரும் பாடல்களால் விளக்கமாம். அவை :—

"காரூர் பொழில்திகழ் மோரூரிற் பாம்பலங் காரரின்மேற்
சீரூர் வருக்கத் தொண்டைமாலை அன்புறச் செப்பினனால்
நீரூர் புடவிக் கவிவாணர் வாழ்த்த நிமிர் களந்தைப்
பேரூர் வருபடிக் காசன் என்றேது பெரியவனே."

"அந்திப் பிறைச்சடை யார்அர வாசலர் ஆலயத்தில்
கந்தப் பிரான்கதை கற்சிலை யால்அமை காங்கெயரில்
விந்தைப் புயக்கும ரேந்திர வேந்து வியந்தெமக்குத்
தந்தச் சிவிகை கொடுத்தான் பெரும்புகழ் தாங்கினனே".

(கொங்கு மண்டல சதகம்.)

## சேதுநாடு சென்றதும்—சம்ஸ்தானப் புலமைபெற்றதும்.

செங்கோட்டுக் கடவுளைத் தரிசித்ததின் பயனாகப் பறிகொடுத்த பல்லக்கிற்கிப் பதிற்பல்லக்குக் கிடைத்தமைக்குப் பரமானந்த மடைந்து, அக்கடவுளை மீண்டும் மலைமேற் சென்று தரிசித்துத் தீந்தமிழ் செறிந்த தமது திருவாக்கால் அவரது செம்பொற் சீரடியை மனதார வாழ்த்தி விடைபெற்றுச் சேதுநாடுகாண வழிகொண்டனர்.

இச்சேது நாடு, பாண்டிய நாட்டிற்குட்பட்ட பழமைபெற்றதோர் நாடு. அல்லாமல், தமிழ் இலக்கியங்களிலும், பெரும்புலவர் பிரபந்தங்களிலும் புகழ்ந்து பாராட்டிய பெருமையும் வாய்ந்தது. இவ்வுண்மை,

................................"போதகலா
மாது மணக்கும் மணவாளன்—சேதுக்குந்
தஞ்சைக்குங் கோழிக்குந் தாமப் புகாருக்கும்
உஞ்சைக்கும் வீணை உதகைக்கும்—வஞ்சிக்குங்

கொற்கைக்குங் கூடற்குங் கோசலைக்குங் காஞ்சிக்கும்
விற்கைக்கு நில்லா மிதிலைக்கு—நிற்கும்
அரசன் அரசர் குலாந்தகன் ஆரப்
பிரசனபயர் பெருமான்,"

எனக் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றிய "சங்கர சோழன் உலாவில்," சேது நாட்டைப் பலநாடுகட்கும் முன்னர் வைத்துப்புகழ்ந்து கூறுவதால் நன்கு தெளியப்படும்.

செந்தமிழைச் செழுமை பெறவளர்த்த பாண்டியரைப் போலவே, சேதுவேந்தரும், பண்சிறந்த பசுந் தமிழையும், அது பயின்ற பாவலரையும் பாலுஞ்சோறும் பரிந்தூட்டிப் பெரிதோம்பிப் பாதுகாத்தாரென்று பலமாக அறியப்படுகிறது. மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர், பொன்னுங்கால் அமிர்தகவிராயர், வேம்பற்றூர் சேவ்வைச் சூடுவோர், சிலேடைப்புலி பிச்சுவையர், ஆளவந்தார், பெரும் பற்றப் புலியூர் நம்பி, (மாதவபட்டர்) பரிமேலழகர், கவி ராசபண்டிதர், பெருமாளையர், சாமிகவிகாள ருத்திரர், கவி குஞ்சர பாரதி, கந்தசாமிப்புலவர், சவ்வாதுப்புலவர், சருக் கரைப்புலவர், பலபட்டடைச் சொக்கநாதப்புலவர், சுப்ர தீபக் கவிராயர், வெண்பாப்புலிக் கவிராயர், மதுரகவி, ஆதியபுலவர் பெருமக்கள் அச்சம்ஸ்தானத்துப் புலவர் பெரு மக்களாய்ச் சிறந்தும், அவர்களால் முறையே, 'தளசிங்க மாலை' 'ஒரு துறைக்கோவை,' 'பாகவத புராணம்,' 'தனி நிலைக்கவிகள்,' 'வாசிட்டம்,' 'திருவாலாவா யுடையார் திருவிளையாடல்,' 'சௌந்தரியலகரி' (தமிழ்) 'நெல்லைக் கோவை,' 'அழகர் பிள்ளைத்தமிழ்' 'அழகர் கலம்பகம்,' 'திரு ப்பூவண நாதர் உலா,' 'முகைத்தீன் ஆண்டவர் பிள்ளைத்

தமிழ்,' 'திருச்செந்தூர்க் கோவை,' 'தேவையுலா,' 'விரலி விடுதூது,' 'வசை கவி,' 'இசைப்பதம்,' முதலிய அரியநூல்கள் பாடப்பட்டும், அரங்கேற்றப்பட்டும் அவ்வவர் தகுதிக்கேற்பப் பொன், பொருள், பட்டாடை, பீதாம்பரம், வண்டி, வாகனம், சிவிகை, விளை நிலங்கள் பெற்றதும் உலகறிந்த தொன்றும். சேதுவேந்தர்களது தமிழ் வளர்ச்சிக்கும், புலவர்களாதரிப்புக்கும் இதனினும் வேறு சான்றுவேண்டுமோ?

இத்தகைய நாட்டையும், அதன் அரசரையும் தமிழ்ப் புலமை சிறந்த படிக்காசப்புலவர், கண்டுகளிக்கத் துணிந்தது தகுதியேயாம். அக்காலை அங்கு அரசராய் விளங்கியவர்,

"இயலைத்தலைபெற்ற முத்தமிழ்வாணர்க்கெழுமடங்கு,
புயலைப் பொருவு கையான்."
"கலைவாணர்சங்கத் தமிழ்க்குருசிச் சித்தங்களிப்பவர்"
பாவுக்கிசையும் பெயரே புனைந்து மெய்ப்பாவலர்தம்
நாவுக்கிசையும் பெரும்புகழான்"
"நாலாம் பனுவல் நவரசச் சொற்றமிழ் நாவலர்க்கு
மேலாம் பரிசருண்மால்"
"பன்னுந் தமிழ்ப்பயிர் வாடாது மாரியிற்பாரின் முத்
பொன்னுஞ் சொரியும் ரகுநாதன்" [தும்

என்று ஒரு துறைக்கோவையில் உவந்தோதப்பட்ட உயர்ந்த பெருமைவாய்ந்த ரகுநாத சேதுபதியாகிய திருமலை சேது பதியாவர்.

நெடுவழி கடந்து நெடும்புணையேறி இராமநாதபுரமடைந்த படிக்காசர், நேரே சேதுவேந்தரைச் சென்று காணுது, தமது கற்றுச்சொல்லி மூலம் அழகிய சீட்டுக்கவி

யொன்று எழுதி, அதில் அரியபிரபந்தங்களும், பஞ்ச லட்சணக்கவியும் அரசப்பேட்டிக்காகக் கொண்டு வந்திருப்பதாகவும், அதுகேட்கத் தம்மை சமுகத்தில் அழைக்கவேண்டுமென்ற கருத்தையுங்காட்டி வேந்தர்க்கு விடுத்தனர். அக்கவி வருமாறு:—

"விருது கவிராசன் கவிச்சக்ர வர்த்தி வாய்
வீண் பேசுவார்கள் மிண்டன்
விஞ்சையர்க்ள் தம்பிரான் களந்தைப் படிக்காசு
விவரமுட னெழுது மோலை
பொருவில் பிரபந்த மதிலிலகு கவிசேகரன்
புகழ்செய் தளவாய் குமாரன்
பூச்சக்ர மன்னர் பணி ரகுநாத சேதுபதி
பூரித் தெழுந்து காண்க
பரிதிமதி யுள்ளளவு நிற்கும் பிரபந்தகவி
பாடி நின்கீர்த்தி கேட்டுப்
பஞ்ச லக்ஷணமொடு தமிழ் காணிக்கையுங்கொண்டு
பரிவாக வுனை நாடியே
இருபதின் காதவழி கடலேறி வந்தனம்
இருந்தமிழ் கோள்ள வேண்டி
இங்நேர மேநம்மை யிருகாத வழியளவும்
எதிர்காண வரல் வேண்டுமே."

செஞ்சொற் கவியமைந்த சீட்டுக்கவியைத் தமிழ்காக்கும் பெருமானாகிய சேதுபதி அரசர்கண்டு, புலவரது புலமை யறிவிற்கு மிக்க மகிழ்ந்து, புலவரைச்சென்றழைத்து வருமாறு தமது பரிசனரில் தக்காரை விடுப்ப, அவர்கள்சென்று புலவரைக்கண்டு புரவலன் அழைத்து வருமாறு ஏவியகட்டளையைத் தெரிவித்தனர். புலவர் களிப்படைந்து வந்த பரிசன

ருடன் சிவிகையூர்ந்து சேதிபதியைக்கண்டு மகிழ அவர் திரு மாளிகை சேர்ந்து, "தமிழினது அருமையறிந்த மூவேந்தரும் அழிந்து, சங்கமும் அழிந்து, இருபத்தொரு வள்ளல்களும் அழிந்து, கவிராசர் பெருங்காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சுபோல் பறக்கும்போது, இந்திரனது கற்பகத் தருவை நிகர்த்திருந்தாய்! இரகுநாதன் என்னும் வெற்றி மிக்கோனே" என்னும் கருத்தமைந்த இனிய கவியொன்று புனைந்து அவரை முதன் முதற் கண்டபோது பாடினர். அப்பாடல் அடியில் வருமாறு:—

"மூவேந்தரும்அற்றுச் சங்கமும் போய்ப்பதின் [மூன்றெட்டுக்
கோவேந்தரும் அற்று மற்றொரு வேந்தன் கொடையும் [அற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம் பஞ்சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாரு ஒத்தாய் ரகுநாத சயதுங்கனே".

வேந்தர் பெருந்தகை, இவ்வின்கவியை நலமுறக்கேட்டு நனிமகிழ்ந்து, அவருடன் அன்பளாவி, அவரது அளப்பரிய தமிழ்ப்புலமையையும், சந்தக்கவியின் இன்ப நலத்தையும் இனிதுணர்ந்து மகிழ்ந்து பல்வகைச் சன்மானமுஞ்செய்து பல்லக்கு முதலிய வரிசையுந்தந்து, மேலும், அவரது சுவையமுது நிறைந்த கவியமுதை நாடோறும் பருகி, இன்புற விரும்பித் தமது சம்ஸ்தானத்துப் புலவருள் ஒருவராகவும் ஏற்படுத்தி மேம்படுத்தினர்.

## பொருமைப்பூசலும்—நிந்தைக்கவிகளும்.

இங்ஙனம் சேதுபதி சமூக வித்துவானுகப் படிக்காசுப் புலவர் சிறந்து வாழ்ந்துவரும்போது,

"பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்ருற் செல்வம்
நயனுடை யான் கட் படின்".

(திருக்குறள்)

—"உதவுமாடியர்.
பார்கெழு பயன் மரம் பழுத்தற்ருகவும்"

(கம்ப ராமாயணம்)

"கற்றையஞ் சுடர்மணி கனக மேனிய
பிற்றையென்னு தருள் பெரியர் வண்மைபோன்
மற்றவ ணுள்ள பன்மரமுந் தம்பய
னெற்றையு முலப்புரு தீகை சான்றவே".

(கந்த புராணம்)

என்ற அருமைச்செய்யுள்களின் கண் குறித்தபடி நடுவூருள் பழுத்த செங்கனித்தருப்போலவும், சிந்தாமணி போலவும் தம்மை விரும்பிவந்து அடுத்தோர்க்குப் பெரும்பயன் அளிக்கும் பான்மையராய்ச் சேதுவேந்தர், திருப்பொலியும் செல்வராகத் திகழ்ந்ததால், புலமை நிரம்பிய செந்தமிழ்க் கவிஞர்கள், திரண்டுகூடி, நவ் நவமாய் நாட்கவிபாடியும். பிரபந்தங்கள் இயற்றியும், புராணம் இசைத்தும், தத்தம் கல்வித் திறமைக்கேற்டப் பல்வகையான பரிசுகள் பெற்றுச்செல்வர். அப்புலவர்குழாத்தில் குடந்தைக்'கும்பன்' என்னும் கம்மியப்புலவரும் கலந்துவந்து கவிபாடிப் பலல்க்குப் பரிசு பெற்றுத் திரும்புகையில், படிக்காசுப் புலவர் பொருது,

முன்னைய பகைமையை மனத்துட்கொண்டு, சேது மன்னரிடத்துக் கும்பகவியைக் குறித்துக்காட்டி, நிந்தையாக, "ஏதையறிவான் இவனுக்கேன் பல்லக்கு" என்ற தலைப்பையுடைய வெண்பா ஒன்று பாடினர். அதுகேட்ட கும்பகவி சிறிதும் தாளாது, படிக்காசுப் புலவரைச் சுட்டி, வசையாக, 'தங்கைக்குத்தான்'—என்ற முதலையுடைய கவி கூறினர். அக்கவிக்கு மறுப்பாகப் படிக்காசர் 'வந்தவழி தானறியா'-என்று மீண்டும் நிந்தைநிறை கவிமொழிந்தனர். திடுக்குற்ற சேது வேந்தர் சிந்தை வருந்திப் புலவருள் மேலும் பகை முற்றாதபடி இடைநின்று தடுத்து, காரணமறிந்தபின், அவர்களது உட்பகையை அறவேயொழிக்குமாறு அவர்களை மிக்க வற்புறுத்தி, இணங்கச்செய்து, அதன் அடையாளமாக ஒருவர் மீது ஒருவர் புகழ்ந்துரையாக, ஒவ்வோர் கவிபாட வேண்டுமென்று கட்டளையிட்டனர். செங்கோலுக்குமுன் சங்கேதமின்மையால் மறுத்துரைக்க வகையற்ற புலவர்கள், உடன்பட்டு முதலில், படிக்காசுப்புலவர், கும்பன் தமக்கு விரோதியாயினும், செந்தமிழ்ப் பாடுதலில் மிக்க வல்லானென்பதைத் தாம் உணர்ந்தவராதலால், அவரை நன்கு மதித்து அத்தகுதிக்கேற்ப யமகப்பாவில்,

> "கும்பா கனக சபாபதியீன்ற குளிர்ந்து ரசிக்
> கும்பா வலர் சிரோமணி நின்றமிழ்த் கோப்பசுவின்
> கும்பாத பாலுடன் றேனையுங் கூட்டிக் குழைத்துச்
> [செம்பொற்
> கும்பாவிலேயெடுத்துக் குடித்தா லந்தக் கூறுக்குமே."
> (பழங்கவித் திரட்டு)

என்றுபாடி அவரது புலமையறிவை மிகப்பாராட்டினர்.

கும்பன் அப்பாடலுக்கு மிகமகிழ்ந்து படிக்காசுப்புலவர் பைந்தமிழின் இனிய பான்மையை,

* "மட்டாருந் தென் களந்தைப் படிக்காசன்
உரைத்த தமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலுங் கைமணக்குஞ் சொன்னாலும் வாய்
துய்ய சேற்றில் [மணக்கும்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினறு
நளினந் தானே."

எனவெகு இனிமையும், அருமையுந்தோன்ற மிக அழகாகப் பாடிப் பாராட்டினர். இப்பாடலைப் பல பட்டரைச் சொக்கநாதப்புலவர், வைத்தீச்சுரர் கோயிலுக்குச் சுவாமி தரிசனார்த்தம் சென்றபோது ஆங்கு அப்போது கட்டளைத்தம்பிரானாயிருந்த படிக்காசுப்புலவரது பாடல்களின் அருமைபெருமைகளை நோக்கிப் பாடியதென்பர். பெரும்பாலாரின் கருத்தும் அப்படியே ஆயின், படிக்காசுப்புலவரைக் கும்பகவி புகழ்ந்து பாடிய கவியாதென்றும், எங்குற்றதென்றும் இப்பொழுது அறியக்கூடவில்லை.

---

* "தேமணக்குங் கோடி வருந்திருமலைராயன் றமிழைச்
செப்பும் போது
நாமணக்குஞ் செவிகுளிரும் அகமலரும் எழுதிவைத்த
நல்லேடெல்லாந்
தாமணக்கும் மரப்பாவை நடனமிடுஞ் சிவன்மரந்
தளிர்க்குஞ் செஞ்சொற்
பாமணக்கு மண்மேல்இவ் வுலகெல்லாஞ் சிட்டை கட்டிப்
பறக்குந் தானே."

அது முதல் புலவர்களிருவரும் அன்பொத்த நண்பர்களாகக் கூடியிருந்தாரென்ப. இது எங்ஙனமாயினும் ஆகுக.

புலவர்களுள், பொறாமைப்பூசல் இயற்கையா யிருந்து வந்ததென்பதற்கு ஆதாரம் இல்லாமற்போகவில்லை. பலபட்டடைச் சொக்கநாதப் புலவருக்கும், சுப்ரதீபக் கவிராயருக்கும் நிகழ்ந்த வசைக்கவிகளே போந்த சான்றாம். அப் பாடல்கள்:

சிவகங்கை ஜமீனைச்சார்ந்த கடம்பங்குடி ஊரினரும், வேளாண் மரபினரும், அரையில் எப்பொழுதும் பட்டுடுத்திருப்பதால், 'பட்டடை' என்னும் அடைகூட்டிப் பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர் என்று பெயர் சிறந்தனர். இவர், ஒருநாள் தெருவழியே சென்றபோது, கம்மியராகிய சுப்பிரதீபக் கவிராயர் காலில் செருப்பிட்டு இவர்க்குமுன் சென்றுகொண்டிருப்பதைக் கண்டு, பொறாது வசையாக,

"சாணாருங் கள்ளுக் குடியார் பணிக்கர்சா ராயமுண்ணார்
கோணாது பாத் குறடுசெய் தாற்பெறுங் கூலியல்லால்
நாணமல் வீதிதொறும் போட்டுச் செல்வது ஞாயமில்லை
வீணா வடாசுப்ர தீப வஞ்ஞான விளக்கொளியே."

(**தனிச் செய்யுட்கோவை.**)

என்று ஒரு கவிகூற அதுகேட்ட சுப்ரதீபக் கவிராயர் பலபட்டடைச் சொக்கநாதரை நோக்கி, வாய்த்துடிப்பாக, அடியில் வரும் கவி கூறி இழித்தனர் என்ப. அது—

"தேவை ரகுநாதன் மெச்சுந் தெய்வகன்னி மீதினிலே
கோவையென்று பில்லிவைத்துக் கொன்றாயே—பாவியுன்றன்
இட்டடைச் சொல்லார் பொறுப்பார் ஏண்டா மடையாபல
பட்டடைச் சொக்கா முழுவம் பா.

எனவருவனவாம்.

தெய்வகன்னி யென்பார் ரகுநாத சேதிபதி வேந்தரது மந்திரி. கோவை—விஞ்சைக்கோவை.

## பழவினையும்—சிறைப்படலும்.

இங்ஙனம் பகையொழிந்தபின் படிக்காசர், சிறிது காலம் செந்தமிழ்க் கலாவிநோதராகிய சேதுவேந்தரிடத்து, விஞ்ஞையர்கள் தம்பிரானாய் வீற்றிருக்கும்போது, அந்நாட்டினை யடுத்துள்ள கீழைக்கரையில் ஔரங்கசீப் முதலிய மகம்மதியமன்னர் மதிக்கவும்; பைந்தமிழ்வல்ல பாவாணர் பாடிப்பரவவும்; பொன்னுடைய அரசியின் பேரன்புபெற்று திருவுடைச்செல்வராகவும், மகம்மதியமத மணிவிளக்காகவும் சிறந்து, "சீதக்காதி" யென்னும் பெயர் (இயற்பெயர் பெரியதம்பி மரக்காயர்) வாய்ந்து கொடைப்பெருஞ் செல்வனாய்ப் புலவர்கட்கோர் பெருநிதியாய் விளங்குகின்றான் என்று கேள்விபானறிந்து, அவ்வள்ளலைக்காண அவாக்கொண்டு, சேதுபதிபிடத்து விடைபெற்றுச் சேதுபதிதந்த சிவிகைமீதூர்ந்து, எக்காளம் முழங்க, ஏவளார் பலர் சூழ்ந்து விருதுகூறப் புவிராயர் போற்றுங் கவிராயராய்ப் பேராரவாரத்துடன் சிவகங்கை வழியாகச் செல்லுகையில், அவ்வூர் முத்துவடுக நாதேந்த்ரன் பந்துவான "திருமலைத்தேவர்," இவரது செலவின் ஆரவாரத்தைக் கேட்டுப் புலவரது பெருமித கோலத்திற்குப் பொறுது அழுக்காரடைந்து, தமது பரிசனர்களை விடுத்துப் புலவரை அழைப்பித்துத் தமது அரண்மனைக்கண்ணுள்ள கிளிக்கூட்டில் சிறைவீடு செய்வித்தனர்.

பொறுமையே இயற்கையாகக்கொண்ட சில பேதையர் சிறக்கத் தரித்துள்ள சிலரது பொன்னணி நல்லாடை முதலியன கண்டு காரணமின்றி யவர்மீது குற்றங்கூறி கோபிப்

பர். இத்தீயரைக்குறித்தே, தேவர் திருவள்ளுவர் தமது திருக்குறளில், 'கயமை' என்னும் அதிகாரத்தில்,

"உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்"

எனக் கூறினராவர். இந்நெறியில் திருமலைத் தேவர் இருந்ததால்,

"அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து"

என்ற அறநெறியுணருனைச் சிறை செய்வித்தனன்.

எதிர்பாராது நேர்ந்த இச்சிறை வாசத்திற்குப் புலவர் சிந்தைநொந்து வருந்தினா ரெனினும்,

"சாதலும் பிறத்தல்தானும் தம்வினைப் பயத்தினாகும்
ஆதலும் அழிவும் எல்லாம் அவைபொருட்கு இயல்பு கண்டாய்
நோதலும் பரிவும் எல்லாம் நுண்ணர் வின்மைமாதோ"

என்ற சிந்தாமணியின் செய்யுள் நினைவிற்கு வரத் தெளிந்தவராய்த் தெய்வநியதியால் பழவினை செறுத்து வந்துறுத்தும்போது செய்வதொன்றுமில்லை யென்று கண்டு, ஆண்டவன் பேரருளை நாடி அந்நினைவோடிருந்தனர், இங்ஙனம் சில பகல் சென்றன.

நல்லோர்க்கு வந்த தீவினை நீடித்து நில்லாவாதலால், திருமலைத் தேவர்க்குச் சிறைசெய்த புலவரைக் காணத் திடீரென ஓர் எண்ணந்தோன்றியது. சரேலென அங்கு வந்தனர். அவர் வரவுகண்ட புலவர் மிக்க சமத்காரமாய்த் தேவர் கேட்டதும் திருவுளமிரங்குந் தன்மையில் இனிய கவியொன்று புதுக்கி, அவர் முகம் நோக்கித் தாழ்ந்த குரலில்,

நாட்டிற் சிறந்த திருமலையா ! துங்க ! நாகரிகா !
காட்டில் வனத்தில் திரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காசன் என்னும் ஓர் பைங்கிளியைக்
கூட்டில் அடைத்துவைத் தாய்இரை தாஎன்று கூப்பிடுதே.

என்று பாடினர். அதுகேட்ட அத்திருமலைத்தேவர், அக் கவியில் அமைந்துள்ள கருத்துக்கு வியந்து மகிழ்ந்து, கணமுந் தாழ்க்காது சிறைநீக்குவித்துப் பேதைமையால் நேர்ந்த பிழையைப் பொறுக்குமாறு வேண்டி அவரைத் தகுதியானவிடத்திற்குக் கொண்டுபோயிருத்தி உபசரித்து அவர் வெறுக்குந்தனையும் பெரும்பொருள் நல்கி வழிவிடுத்தனர்.

## சீதக்காதிவள்ளலைச் சென்றடைந்ததும், செந்தமிழ் பாடிப் பரிசுபெற்றதும்.

சிறைநீங்கிய புலவர் இடையில் எங்குந் தங்காது நேரே காயற்பட்டணம்சேர்ந்து, சீதக்காதிவள்ளலின் திருமனையடைந்து, அவருடைய விரிந்த சிந்தையையும், பரிந்தருளும் தயாளத்தையும், கொடைமடத் தன்மையையும், கோதற்ற குணநலத்தையும், செஞ்சொற்கவி கேட்டுவக்கும் திருச்செவியையும்பற்றி முன்னரே தக்கோரால் கேட்டறிந்துள்ளவரானதால், யோசியாமல் நேரே சிவிகைவிட்டிறங்கிப் பிரவுவைச்சென்று கண்டனர். காண்டலும், இவரது பாவிசைக்குந் திறமையையும், பரந்தபுகழையும் முன்னமே பிரபு அறிந்திருந்தாரானதால், இவரது நல்வரவுக்கு நகைமுகங்காட்டி இன்சொற்புகன்று, நல்லிருக்கையோன்

றில் இருத்தினன். அப்போது செந்தமிழ்வாணர், பிரபு செவிகளிக்குமாறு: —

நேசித்து வந்த கவிராசர் தங்கட்கு நித்தநித்தம் [பொருள்
பூசிக்கு நின்கைப் பொருளொன்று மேமற்றைப் புலவர்
வேசிக்குஞ் சந்து நடப்பார்க்கும் வேசிக்கு வேலைசெயும்
தாசிக்கு மாகுங்கண் டாய்சீதக் காதி தயாநிதியே.

ஈயாத புல்லர் இருந்தென்ன? போயென்ன? எட்டிமரம்
காயா திருந்தென்ன? காய்த்துப்பலனென்ன? கைவிரித்துப்
போயா சகம்என் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடி
ஓயாமல் ஈபவன் வேள்சீதக் காதி யொருவனுமே. [யாய்

காய்ந்து சிவந்தது சூரியகாந்தி; கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்; தொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம்; அநுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக் காதியிருகரமே.

ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்சக் காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம லேஅன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே.

தரைகண்டமட்டும் படர்ந்தண்ட கோளமுந் தாவியெங்கும்
உரைகண்ட கீர்த்தி பெறுஞ்சீதக் காதி யுலகினில்வெண்
டிரைகண் டெழுங்கடன் மீதேதன் வங்கத்தைச் செலவிட்டுக்
கரைகண் டவனினங் காணுனென் னுசைக் கடற்கரையே.''

எனச் சீதக்காதிவள்ளலின் அருமை, பெருமை, ஈகை, புகழ், அழகு முதலிய பெருநலன்களை இனிதுறப் புனைந்து நாவாரப் பாடினர். அச்செம்பாகமிக்க செஞ்சொற்கவிகளை

சிந்தையும் செவியும் ஒருங்கே களிப்பக் கேட்ட சீதக்காதி வள்ளல், உவந்த மனத்தனாய் அரும்பெரும் பொருள்களை அபரிமிதமாய்ப் புலவர்க்கு அளித்துப் பெருமைப்படுத்தினன். சீதக்காதி புறமதத்தினனாயினும் செந்தமிழ் கேட்பதில் தெவிட்டாத விருப்பமும் புலவர்களைப் பொன் போல்மதித்துப் போற்றுதலில் பேரன்பும் பெருகியவனானதால், படிக்காசப்புலவரைத் தமது நல்விருந்தினனாகச் சில காலமேனும் தங்குமாறு வேண்ட, புலவரும் அவனது விருப்பத்திற்கிணங்கி யிருந்துவந்தனர்.

## திருச்செந்தூர் சென்றதும்—செவ்வேளைப்பாடியதும்.

இங்ஙனம் சீதக்காதி வள்ளலின் பேரா தரணையில் இருந்து கொண்டிருந்த படிக்காசருக்குத் தம் நெஞ்சகத்தே நெடு நாட்களாக,

"அலைமுகந்த வழ்ந்து சினைமுதிர்ந்த சங்கம்
அலறிவந்து கஞ்ச—மலர்மீதே
அளிகலந்தி ரங்க இசையுடன் றுயின்ற
அரிய செந்தில்—"

"சங்கங்கஞ் சங்கயல் சூழ்தட
மெங்கெங்கும் பொங்கம காபுனி
தந்தங்குஞ் செந்தில்"

"திரளுமணி தரளமுயர் தெங்கிற் றங்கிப்
புரளஎறி திரைமகர சங்கத்துலங்கத்
திமிரசல நிதிதழுவு செந்தில்.—"

"தினகர திண்டேர்ச் சண்டப்
பரியிட றுங்கோட் டிஞ்சித்
திருவளர் செந்தூர்.—"

(திருப்புகழ்)

(ஒரோலி வேண்டுறை.)

"காரேய் நிறுத்தறுகட் கறவுடைக் கடுங்கூற்றங் கலந்த
யாரே விலக்குவா ரந்தோ! நமரங்காள்! அறிதிரன்றே [காலை
நீரே யுயப்போமா? நின்று வலித்திரேற்
கூரேய் வடிவெற் குமரன் குடநாட்டுச்
சீரேய் திருச்செந்தில் சென்று தொழுமினே"
(திருச்செந்திற் கலம்பகம்)

*"போய்வத ஞரம்ப மாடார் திருச்செந்தில் புக்குறையார்
சேய்மலர்த் தாளிணை சிந்தைசெய் யார்திரு மான்மருகன்
காய்சினவேலு மயிலுமென் ஞர்கடல் சூழுலகிற்
பேயறி வாளரெவ் வாறறுப் பார்தம் பிறப்பினையே."

என்று செவ்வேட்கு வழிவழியடிமைபூண்ட முருகனடியார்களால் வியந்தோதப்பட்ட பெருமை மிக்குடைய செந்தில் நகரையும், அந்நகரில் அலையெறி கடலின் எதிரே ஆலயம் அமர்ந்தருளிய செழுங்கரும்பனைய செவ்வேளையும், கண் களிக்கக்கண்டு, களிபேருவகை கொள்ள வேண்டுமென்ற பேராவல், பெயர்த்தெழுந்து பிடர் பிடித்து உந்தியதால், சீதக்காதி வள்ளல்பால் நல்விடைபெற்று, திருச்செந்தூரடைந்து, வதனும்பரத்தில் நீராடி, நியமமுற்றி, ஆறெழுத்

* "சுழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வர் துன்ப மின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே". 36
(கந்தரலங்காரம்)

*மேல் நட்சத்திரப்புள்ளியிட்ட செய்யுளோடு இதனை ஒப்பிடுக.

தோதி ஆலயமடைந்து, ஆங்கு நன்னீரலர்ந்த பன்னிருகையான், எளியோரைக்காக்கும் ஏந்தலாய் இனிதமர்ந்துறையும் அழகுறு கோலங்கண்டு, ஆறுக்காதலால், அகங்கரைந்து, மெய்மயிர்பொடிப்ப, இன்னமுதுண்டார் போல, உவகை பொங்கத் தமது திருந்திய நாவால், செம்பாகமாக,

முற்கரை அப்பரை ஏறவிட் டாட்கொள் முதல்வர்உள்ளக்
கற்கரைக் கும்படி போதித் திடுங்கரு ணைக் கடலை
† சிற்பரைக் குட்டியை எங்கெங்குந் தித்திக்குஞ் செங் [கரும்பின்
சர்க்கரைக் கட்டியைக்கண்டேன் செந்தூர்எனுந்தானத்திலே."

முன்னம் நின்னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச் சிந்திக்
கன்னமுங் கிள்ளிய நாள்அல்ல வேஎன்னைக் காப்ப தற்கே
அன்னமும் மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட ஆண் [பிள்ளைநீ
இன்ன முஞ்சின் னவன் தானோ செந்தூரில் இருப்பவனே"

சின்னஞ் சிறுபிள்ளை செங்கோட்டுப் பிள்ளை சிவந்தபிள்ளை
பொன்னன் மணிப்பிள்ளை பூலோகம் எங்கும் புகழும்பிள்ளை
சொன்னெஞ் சுழல்கின்ற சூரனைக் கொன்றசொக் கேசர் [பிள்ளை
வன்னக் கிளிப்பிள்ளை செந்திற் குறத்திக்கு மாப்பிள்ளையே."

கல்லடிக்கும் உளியிரண்டு காதடிக்குள்
அடிப்ப தென்னக் கவிதை கேட்டுப்
பல்லடிக்கக் கிடுகிடெனப் பறையடிக்கும்
நெஞ்சர்தமைப் பாடு வேனோ?
வில்லடிக்கும் பிரம்படிக்குங் கல்லடிக்கும்
விரும்பி நின்ற மெய்யன் ஈன்ற
செல்லடிக்குந் தடவரையிற் சேறடிக்க
அலையடிக்குஞ் செந்தி லானே"

---

† சிற்பரைக்குட்டி—ஞான சத்திபுதல்வன்.

இப்பாடலின் பொருள்:—“அருச்சுனனது வில்லடிக்கும், பாண்டியனது பிரம்படிக்கும்,சாக்கிய நாயனரது கல்லடிக்கும் விரும்பியிருந்த உண்மைப்பொருளான பரமசிவன் பெற்ற, மேகங்கள் தவழ்கின்ற பெரியமலையின் மீது சேறுபடும்படி அலைகள் மோதுகின்ற திருச்செந்தூரனே! கல்லைவெட்டு கின்ற உளியானது இரண்டுகாதுகளின் அடியில் அடிப்பது போலப் புலவர்களுடைய கவிகளைக்கேட்டுப் பற்கள் ஒன்றோ டொன்று கிடுகிடென்றடிபட நடுங்குகின்ற மனத்தையுடைய வரை நான் பாடுவேனோ? பாடமாட்டேன்” என்றபடி.

திருச்செந்திலானே! என் கவிகளைக்கேட்டு மகழும் உன்னைப் பாடாமல், அவற்றைக் காதடியில் உளிவைத்து அறைந்தாற்போல் இருப்பதென வெறுப்பாய்க் கேட்கும் லோபரைப் பாடுவேனோ என்பது கருத்து.

என்னும் செஞ்சொற் கவிகளைப்பாடித் திருமுருகன் சேவடி தொழுது பிரியாவிடைபெற்று ஆலயம் நிங்கி, மற்றும் அகத் தியமுனிவர் இனி தமர்ந்துறையும் ‘பொதிகைமலை, பாவ நாசம், குற்ருலம்’ முதலிய புனிதமிக்க பாண்டி நாட்டுப் பழம்பதிகளையும் சென்று தரிசித்துப் பிரமானந்தம் அடைந்தனர்.

## சீதக்காதி இறப்பும்-பிரிவிற்காற்ருது பாடிய சரமகவிகளும்.

இதன் பின்னர் புலவர், வண்டமிழ் வாணர்க்கோர் வைப்பு நிதியும், தமது சந்தக்கவிஃயச் சிந்தை நுகர்வதில் முந்து விருப்புடையவருமான சீதக்காதிப் பிரபுவைக் காண விழைந்து கீழக்கரைக்கு வழிகொண்டனர். கொண்டபடி விரைந்தகதியில் அவ்வூரை அணுகியபோது, இரவலர்க்கு

மாபெரும் பொன்னை மாரிபோல் வழங்கிய அம்மகம்மதிய வள்ளல், இம்மண்ணாடு நீங்கி விண்ணாடுசென்றான் என்ற கொடுமொழியைச் செவிகைப்பக்கேட்டு, சிந்தைமிகநொந்து, அவ்வள்ளலின் வரையாதளித்தவண்மையையும் துன்பமடைந்தோரைத் துயராற்றிய தூய குணத்தையும், கற்றோர்பால் அவர்காட்டிவந்த கரையற்ற அன்பையும், நற்குண சீலத்தையும், நினைந்து நினைந்துருகிக் கன்றிழந்த ஆபோல் கதறியரற்றினர். பின் ஒருவாறுதேறி, புகழுடம்பு காணதொழியினும், பொய்யுடம்பு புதைக்கப்பட்டுள்ள இடுகாடு அடைந்து அவர்தம் சமாதிக்குழியையேனும், கண்டு செல்வோமெனக் கருதி ஆங்கடைந்து, அதனருகே நின்று, பரிவுறு மனத்துடன் இரங்கிய குரலில்,

விண்ணுக்கும் மண்ணுக்கும் வேராய் விளங்குதே வேந்
[திரன் என்னும்
கண்ணுக் கினிய துரைசீதக் காதி கமலநிகர்
தண்ணுக் கிசைந்த வதனசந்த் ரோதய சாமியிந்த
மண்ணுக்குள் ளேயொளித் தரின்புல வோர்முகம் வாடியதே.

தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத் தான்தமிழ் நாவலரை
ஓட்டாண்டி யாக்கி அவர்கள்தம் வாயில் ஒருபிடிமண்
போட்டான் அவனும் ஒளித்தான் சமாதிக் குழிபுகுந்தே.

பூமா திருந்தென் புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் நாவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே.

மறந்தாகி லும்அரைக் காசுங்கொ டாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன இருந்தாவ தென்ன இறந்து விண்போய்ச்
சிறந்தாளுங் காயல் துரைசீதக் காதி திரும்பிவந்து
பிறந்தால் ஒழியப் புலவர் தமக்குப் பிழைப்பில்லையே.

என்னும் இனிய பாடல்களைப்பாடி சற்றுநேரம் தங்கி அப்பாற் சென்றனர்.

சிலர் அவர் பாடலுக்குவந்து, சமாதி திறந்து சீதக்காதியின் சவம் தன் சுட்டுவிரல் காட்டி வைரமோதிரத்தைக் கழற்றிக் கொள்ளக் குறிப்பித்ததாயும், அதன்படியே புலவர் அம்மோதிரத்தைக் கழற்றிக்கொண்டு "செத்துங்கொடுத்தான் சீதக்காதி" என்று புகழ்ந்துபாடினர் என்றும், அதன் பிறகே இப்பழமொழி உலகில் பரவியதென்றும் கூறுகின்றனர். உண்மை எவ்வாறோ? அறியுமாறில்லை.

மற்றும், சீதக்காதி வள்ளலின் பிரிவிற் காற்றாது நமது புலவர் வருந்திப் பாடியது போலவே, அக்காலத்து சீதக்காதியின் சமூக வித்துவானாயிருந்த பாண்டி நாட்டு நமசிவாயப் புலவரும், பிரபுவின் பிரிவிற் கிரங்கிப்பாடிய கவிகள், கவிச்சுவை விழைவார்க்கு இன்ப மளிக்குமென்பது கருதி அவைகளையும் இதன் கீழ் தருகின்றோம்:—

"மைப்போ தகமும் வளநாடுஞ் செந்தமிழ் வாணர்க்கருள்
கைப்போ தகமனை யான்சீதக் காதியைக் காத்திருந்த
அப்போ தறிந்திலம் இப்பாழ்ம் பணத்தின் அருமையெல்லா
இப்போ தறிந்தனம் ஈயாத லோபர் இடத்திற்சென்றே."

"தடக்கும்ப கிம்புரிக் கொம்பா சலபெருந் தந்திபட
நடக்குந் தரங்கத் துரைசீதக் காதிநன் ஞட்டினல
வடகருங் குமக்கொங்கைப் பெண்ணென் பவடெரு
[வாசலிலே
கிடக்குங் கவியும் பரராச ரத்ன கிரீடமுமே"

நன்ருய் சோதிடரை நிந்தித்ததாக அமைத்துக்கூறியது.

"மாகத்தத் தும்புக ழான்பகை வேந்நர் மகுடம்பொடி
யாகத்தத் தும்பரி யான்சீதக் காதி யணிமலரின்
ஏகத்தத் தும்பி யிசைபாடு மார்பன் என்மகட்கோர்
மோகத்தத் துண்டென்று சொன்ஞர் இலேமுன்
[மொழிந்தவரே"

பிரபுக்களின் கொடைச்சிறப்பைக்கூற வந்த கவியொருவர் சீதக்காதியின் சிறப்பையும் சேர்த்து கூறியபாடலொன்றும் காணப்படுகிறது. அதுவருமாறு:—

"ஆராயும் வேதியர்க்குள் ஆருமில்லை
அறிவு கெட்ட வலையரும் அப்படியே ஆவர்
சீராய துருக்கருக்குட் சீதக் காதி
சிறப்புடைய வணிகருக்குட் செந்தில் காத்தான்
காராளர் தங்களுக்குள் வெண்ணெ யூரான்
கருதரிய மறவருக்குள் மூவராயன்
பேரான மூங்கிலணை நல்ல காமா
தொட்டியர்க்குள் நீயொருவன் பேர் பெற்ருயே"
(தனிச் செய்யுட்கோவை)

## தண்டலை நீணெறி சென்றதும்—சதகம் பாடியதும்.

அங்ஙனம் சென்ற நமது புலவர்க்கு, முன்னர், தாம் கல்வி கற்றுக் கவிபாடத் தேர்ந்த திருவாரூரையும், ஸ்ரீ தியாகராயப்பெருமானாரையும், தமது தமிழாசிரியர் தவப் புதல்வர் சதாசிவ தேசிகரையும் தரிசிக்கவேண்டுமென்னும் அவாத்தோன்ற, அதன்படியே ஆங்குச் சென்றடைந்து அவர்களை அன்புறத் தரிசித்து அரிதில் விடைபெற்று, அதற்குத் தெற்கு 15 மைல் தூரத்தில் உள்ளதும், அரிவாட்ட நாயனார் சிவபெருமானுக்குச் செந்நெல்லரிசி, மாவடு, செங்கீரை முதலிய நிவேதித்து முத்திபெற்ற மூதூரும், கூர்மவதாரங் கொண்ட விஷ்ணு அகங்கரித்துக் கடலைக் கலக்க, சிவபெருமான் அக்கூர்மத்தின் அகத்தை அடக்கி அதன் ஓட்டை அணிந்தருளிய அரும்பதியும்,

> கருவ ருந்திபி னான்முகன் கண்ணனென்
> றிருவ ருந்தெரி யாவொரு வன்னிடம்
> செருவ ருந்திய செம்பியன் கோச்செங்க
> ணிருபர் தண்டலை நீணெறி காண்மினே"

என்ற திருத்தேவாரம் பெற்றதுமான "தண்டலை நீணெறி" என்னும் தலத்தைச் சேர்ந்து ஆங்குக் கோயில் கொண்டருளிய 'நீணெறி நாதரை'யும், 'ஞானம்பிகை'யையும் தரிசித்தனர். அப்போது அத்தலத்துள்ள சில நல்லன்பர்கள் புலவரது கவிப்புலமையை அறிந்து, அவரையடுத்து இங்குள்ள கடவுள் மீது ஓர்பிரபந்தம் இயற்றும்படி கேட்டுக்கொண்டனர். அவர்கள் விருப்பத்திற்கிணங்கிய படிக்காசர், நீணெறியாரைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு, "தண்டலையார்

சதகம்'' என்னும் பெயரில் 100 செய்யுட்களில், ஒவ்வோர் பழமொழியையும் ஒவ்வோர் செய்யுளின் ஈற்றிலும் அமைத்து, அதனை விளக்கு முகத்தான் அரிய நன்னீதிகளையும், சிறந்த பொருட் கூறுகளையும், பழைய வரலாறுகளையும் உலகானுபவங்களையும் இடையிற் பெய்து இன்பச்சுவை யூற்றெழ இனிதுறப்பாடி முடித்தனர். இதுகண்ட அவ்வன்பர்கள், அகமிக மகிழ்ந்து புலவர் தம்புலமைக் கேற்பப் பொன் முதலிய வரிசைகள் பெருமைப்பட நல்கி நன்கு உபசரித்தனர். மேற்கூறிய சதகத்திலிருந்து சில பாடல்களைத் தமிழன்பர்கள் சுவைத்து இன்புறுமாறு இதன்கீழ்த் தருகின்றேம். அவைகள் வருமாறு:—

### இடமறிந்து நடக்கவேண்டும்.

கொடியருக்கு நல்லபுத்தி சொன்னாலும்
தெரியாது; கொடையில் லாத
மடையருக்கு மதுரகவி உரைத்தாலும்
அவர் கொடுக்க மாட்டார்; கண்டீர்
படியளக்குந் தண்டலைநீள் நெறியாரே
உலகமெலாம் பரவி மூடி
விடியல்மட்டு மழைபெயினும் மதின்ஓட்டாங்
கிளிஞ்சல் முளை வீசி டாதே." (21)

### தன்பாவம் தன்னைத் தொடரும்.

செங்காவி மலர்த்தடஞ்சூழ் தண்டலைநீள்
நெறியேநின் செயலுண் டாகில்
எங்காகி லென் அவரவ ரெண்ணியதெல்
லாமுடியும் இல்லை யாகில்

பொங்காழி சூழுலகில் உள்ளங்கால்
வெள்ளெலும்பாய்ப் போக ஓடி
ஐங்காதம் போனாலுந் தன்பாவந்
தன்னுடனே ஆகுந் தானே." (22)

## மூடர் தமிழின் அருமை அறியார்.

தாயறிவாள் மகளருமை தண்டலை நீள்
நெறிநாதர் தாமே தந்தை
ஆயறிவார் எமதருமை பரவையிடந்
தூதுசென்ற தறிந்தி டாரோ
பேயறிவார் முழுமூடர் தமிழருமை
அறிவாரோ பேசு வாரோ
நாயறியா தொருசந்திச் சட்டிபா
னையின் அந்த நியாயந்தானே." (23)

## ஈயார் வாழ்வு உலகிற்குப் பயன்படாது.

கட்டுமாங் கனிவாழைக் கனிபலவின்
கனிகளுப கார மாகும்
சிட்டருமவ் வணந்தேடும் பொருளை யெல்லாம்
இரப்பவர்க்கே செலுத்தி வாழ்வார்
மட்டுலவுஞ் சடையாரே தண்டலையா
ரேசொன்னேன் வனங்கள் தோறும்
எட்டிமரம் பழுத்தாலும் ஈயாதார்
வாழ்ந்தாலும் என்னுண் டாமே." (24)

### புகழுடன் வாழ்பவனே புருடன்.

“ஓதரிய தண்டலையா ரடிபணிந்து
நல்லனென் றுலக மெல்லாம்
போதமிகும் பேருடனே புகழ் படைத்து
வாழ்பவனே புருட னல்லால்
ஈதலுடன் இரக்கமின்றிப் பொன் காத்த
பூதமென இருந்தா லென்ன
காதவழி பேரில்லான் கழுதையோ
டொக்குமெனக் காணலாமே.” (25)

### ஊமைகண்ட கனவும்-தமிழ் ஞானம் இல்லாதவன் அறிவும் ஒன்று.

பரியாம லிடுஞ்சோறும் ஊமைகண்ட
கனவும்போல் பரிசி லீயான்
அரிதான செந்தமிழின் அருள்சிறிதும்
இல்லாதான் அறியுமோதான்
கரிகாலன் பூசைபுரி தண்டலை நீள்
நெறியாரே கதித்த ஓசை
தெரியாத செவிடன்கா தினிற்சங்கு
குறித்ததெனச் செப்பலாமே.” (26)

### இரத்தலின் இழிவும்—இரங்கிப் பாடியதும்

தமது வாழ்நாளெல்லாம் இங்ஙனமே வயிற்றின் கொடுமையை நிவர்த்திப்பதன் பொருட்டுத் தேயமெங்கணும் சுற்றித்திரிந்து, செல்வர் வாழ்கின்ற திருமனையெய்தி, அவரைப் பல படியாகப் புகழ்ந்துபாடி அவர்மகிழ்ந்தீயும் நன்கொடையைப்பெற்று வாழ்வது?

"பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற்கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்துநீட்டி
மல்லெலாம் அகலவோட்டி மானமென்பதனை வீட்டி
இல்லெலாம் இரத்த லந்தோ! விழிவிழி எந்தனுான்றும்."

என்று பரிந்துகூறிய கவியின் கருத்தின்படி கவிபாடி யாசிப்பது? அந்தோ! இதனை எண்ணுந்தோறும் மனத்தைப் புண் படுத்துகின்றதே. முற்காலத்தில் தமிழ்க்கலை சிறந்து செழிப் புற்றிருந்தபோது புலவர் வாழ்க்கை பெருமை பெற்றிருந் தது. இப்போதோ! தமிழ்கற்றாரும், அதன் அருமையறியா தாரும் குறுகி அருமையாகக் காண்கின்றனர். இக்காலத் தில் தமிழ்கற்றோர் வாழ்ந்து சிறப்புறுவதெங்ஙனம்? கல்லா தார் கனத்துடன் சீர்சிறக்கச் செழித்து வாழ்வதையும் கற் றோர் இன்முகம் கோட்டிப்பிறரகஞ் சென்று தமது வறுமை நிலை கூறி அவர் பரிந்தீயும் பொருள்பெற்று வாழ்தலையும் நோக்கும்போது, பாடிப்பிழைக்கும் வாழ்க்கை ஓர் வாழ்க் கையாகத் தோன்றாது, இழிவாகத்தோன்றுதல் கண்டு, மன மிக விரங்கிய நமது புலவர், தமிழ்ப்பாடுந் தமது தொழிலை மிகவெறுத்து,

"அடகெடுவாய் பலதொழிலும் இருக்கக்கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில் லாமல்
திடமுள மோகனம் ஆடக் கழைக்கூத் தாடச்
செப்பிடு வித்தைகள் ஆடத் தெரிந்தோம் இல்லை

தட(நிற) வேசையராய்ப் பிறந்தோம் இல்லை
சரியான தமிழை விட்டுத் தைய லார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோம் இல்லை
என்ன சென்மம் எடுத்துலகில் இரக்கின்றோமே."*

என்று பாடி வருந்தினர்.

## சைவமடஞ் சார்ந்ததும்—தம்பிரான் பட்டம் பெற்றதும்.

இங்ஙனம் சிலகாலம் சென்றபின், புலவர்க்கு லௌகீக வாழ்க்கையிலும், புலமைத்தொழில் புரிந்து பிழைப்பதிலும் மனது மிக நொந்து வெறுப்புற்றதால், அது விஷயமாகத் தனித்திருந்து ஓர்நாள் ஆழ்ந்த சிந்தனையில் நெடுநேரம் அடியில்வருமாறு ஆலோசிக்கலாயினர்.

"நாம் எத்தனை நாளைக்குச் சுற்றமென்னும் தொல்குழாங்களைப் பற்றிக்கொண்டு, அவர்காரணமாகப் பொன்னும் மண்ணும், போகங்களும் வேண்டி உடம்பை வளர்த்து உலகத்திலே நாம்வந்த காரியத்தையும், கடமையையும் மறந்து நாள்

---

நட்சத்திரப் புள்ளியிட்ட செய்யுளோடு இதனை ஒப்பிடுக.

* "கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான் கொடுத்துத்தானிரட் சித்தானா
அல்லைத்தான் சொல்லித்தா னழைத்தா னேவைத்தான் ஐயோ! எங்கும்
பல்லைத்தான் றிறக்கத்தான் பதுமத்தான் புவியிற்றான் பண்ணினானே."

(இராம சந்திர கவிராயர்.)

கழிப்பது? மரணம் இன்று வரினும் வரும்; நாளை வரினும் வரும்; நாளை நின்று வரினும் வரும். அதற்கோர் கால வரையில்லை.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

ஆனதால், நாம் பிறவிக்கடலைக் கடத்தற்குப் பெரிதும் முயல வேண்டும்.

"அறவாழி அந்தணன் றாழ் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது"

"ஆளாகார் ஆளானாரை அடைந்து உய்யார்
மீளா ஆள்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோழதா சுரையோ தொழும்பர் செவி
வாழாது மாய்ந்து மண்ணாகிக் கழிவரே"

என்ற செய்யுளின் கருத்துக்குள்ளாகாது, மதிசூடி நதி யணிந்த நல்லார் பரவும் நாயகனையும், அவர்தம் நல்லடியார் களையும், நலமுற வணங்கி வாழ்த்தி நாம் நலம் பெறவேண் டும். இன்றேல் உய்வில்லை.

எவரும் பிறவிக்கடலைக் கடக்கவேண்டுமாயின், இறை வனுக்கு ஆட்பட்டும், ஆட்பட்டார்க்கு அடிமைசெய்தும், இறைவன் அடியைத்தியானித்தும், அவன் புகழைக் கேட் டும், வாயார வாழ்த்தியும் நிற்றல் வேண்டும். ஆனதால், நாம்

"செம்மலர் நோன்றாள் சேர வோட்டார்
அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் செய்கையும்
ஆலயந் தானும் அரன் எனத்தொழுமே."

என்ற சைவ சாத்திரப்படி இறைவனது *பதி, பசு, பாச லக்ஷ ணங்களை யுணர்ந்து, அவற்றின் பயன்தெரிந்து நல்லாசி

ரியனை யடைந்து தீக்கைபெற்று, அரன்பணியாற்றி அந்த மில் இன்பம்பெற முந்தவேண்டும். இதற்குச்செய்வது யாது? என்ற யோசனை தோன்றியது; அப்பொழுதே சோழ நாட்டில், சைவத்தையும், தண்டமிழையும், சாலப்பேணி, நன்னிலையிலுயர்த்தும் சைவசமய குரவரது பண்டார மடத்தை யடைந்துதொண்டு புரியவேண்டுமென்னும் முடிவு செய்தனர்." அதனையே கடைப்பிடியாகக்கொண்டு, பாட்டிற் சிறந்த படிக்காசர் தருமபுரங்காண பிரயாண மேற்கொண்டார்.

தருமபுரம்—தேவாரப் பதிகங்கள் இருநூற்று எழுபத்தி நான்குபெற்ற திருப்பதிகளுள் ஒன்றாயதும்; சோழ நாட்டு நூற்றுத்தொண்ணூறு ஸ்தலங்களில் ஓர் எண்ணையுடையதும்; தென்னிந்திய ரயில்வே பேரளம் லயனில், காரைக்கால் ரயிலடிக்கு மேற்கே அரைமயில் தூரத்துள்ளதுமான தோர் அரும்பதி. மற்றும்; "மாதர் மடப்பிடி" என்ற யாழ் மூரிப் பதிகம் ஸ்ரீ திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற பெருமை யுடையதும்; பிரமா, தருமன் முதலியோரால் பூசித்துப் பெருமை பெற்றதும்; பின்னும்,

"வார்மலி மென்மு லைமாதொரு பாகம தாகுவர்
வளங் கிளர் மதி யரவம் வைகிய சடையர்
கூர்மலி சூல மும்வெண் மழு வும்மவர் வெல்படை
குனி சிலை தனிமலைய தேந்திய குழகர்
ஆர்மலி யாழி கொள்செல் வனு மல்லிகொ டாமரைம்
மிசை யவ னடிம் முடி யளவு தாமறியார்
தார்மலி கொன்றையலங் கலு கந்தவர் தங்கிடந்
தடங் கடல் லிடுந் திரைத் தருமபுரம் பதியே."

என்ற தேவாரமேற்றதுமான திருத்தலம்.

அன்றியும், இத்தருமபுரம் சைவ மடங்களுள் ஒன்றாய்ச் சிறந்து புகழ் பெருகி யிருப்பினும், இவ்வாதீனத்தில் எழுந்தருளிய தேசிக மூர்த்திகள், திருவாவடுதுறை மடத்துத் தேசிக மூர்த்திகளைப்போல் அரிய நூல்களையும், உரைகளையும், மிகுதியாகச் செய்யாது பக்குவ முற்றுக் கற்பார்க்கு மெய்கண்ட சாத்திரங்களைப் போதிப்பதில் வல்லாராயிருந்தனர்.

இவ்வாதீனத்தில் தான், குன்றமெறிந்த குமரவேளின் பேரன்பிற் கினியராய்ச் சிறந்து, செந்தமிழ்க் கவிகளைத் தேனெனப் பாலெனச் செழுங்கனி ரசங்கலந்த தீம்பாகெனப் பாடி, கேட்போர் செவிக்கும் சிந்தைக்கும் நல்விருந்தூட்டிய 'ஸ்ரீ குமர குருபர முனிவரும்,' கந்தபுராண சுருக்கம்பாடிய ஸ்ரீ சம்பந்த சரணாலயரும், செந்தமிழ்க்கவிகளைச் செம்பாகமாகப் பாடுவதில் மிகச்சிறந்த 'வெள்ளியம்பலவாண முனிவரும்' ஞானோபதேசம் பெற்று நற்கதிபெற்றது.

இம்மடத்தின் தலைமை ஞானாசிரியராய் விளங்கிய தேசிக மூர்த்திகள் திருவாரூர், 'ஸ்ரீ ஞானப்பிரகாசப் பெருந்தகை' யாரென்று அறியப்படுகிறது. இதற்குச்சான்று,

"காட்டிருந் தாலும் மலையிருந் தாலுங் கருதரிய
நாட்டிருந் தாலும் நமக்கென்ன காணல்ல தோர்கமலை
வீட்டிருந் தாண்டருள் ஞானப்ர காசன் விரைமலர்த்தாள்
கேட்டிருந் தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே"

(ஸ்ரீ மாசிலாமணி தேசிகர்)

"ஆய்வார் பசுபதி பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்ல
லோய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையின் ஞானப்பிர காசன்மெய்த் தொண்
[டர்களே."

(ஸ்ரீ சம்பந்த சரணாலயர்.)

எனவரும் இனிய பாடல்களேயாம்.

இங்ஙனம் போற்றுதற்குரிய பெருமைக்குறைவிடமாய், முத்தி வீட்டுக்கு மார்க்க சகாராய் விளங்கித் தமிழையும் சைவத்தையும் நலம்பெற வளர்த்த சைவப்பெரியார் திருவீற்றிருந்தருளும் தருமபுரம் சிறிது நாளில் சென்றடைந்து தேசிக மூர்த்திகளைத் தரிசித்துத் தமது கருத்தை விண்ணப்பித்துக் கொண்டனர். படிக்காசரது தமிழுயர்வு, சாந்த குணம், பக்திப்பெருக்கு, சைவப்பற்று, துறவுத்தன்மை தூயகுண மாதியவைகள் துலக்கம் பெற்றிருப்பதை எளிதின் உணர்ந்த ஞானாசிரியர், அவர்பால் மகிழ்வுற்று, சைவ மடங்களின் வரன்முறைக்கேற்பப் படிக்காசுப் புலவருக்குக் கல்லாடை முதலிய சிவச்சின்னங்களைத் தந்து தூயராக்கி ஞானோபதேசம் செய்து அடிமை கொண்டார். ஞானோபதேசம்பெற்ற புலவர், அம்மடத்திலேயே அணுக்கத்தொண்டராக இலங்கி வந்தனர்.

இவ்வாறு சிலகாலம் சென்றபின், வைத்தீச்சுரர் கோயில் கட்டளைத் தம்பிரான் ஸ்தானத்தில் தக்கார் இல்லாமை கண்டு இவரை அந்த ஸ்தானத்தை வகிக்கும்படி சன்னிதானம் ஆணையிட்டருள, அதனை மறுத்தற் கஞ்சி உத்திரவைச் சிரசாக ஏற்று ஆசிரியரிடம் வணங்கி விடைபெற்

றுத் தருமபுரம் நீங்கி வைத்தீச்சுரர் ஆலயமடைந்து, தமக் கருளிய ஸ்தானத்தமர்ந்து, சிவ வழிபாட்டில் மிக முனைந்து ஆன்ம லாபத்தைப்பெருக்கி யாவருக்கும் இனியராய் "படிக் காசுத் தம்பிரான்" என்று பட்டம் பெற்று பலரும் பணிந்து போற்றச் சிறப்புடன் இருந்துவந்தனர்.

## புள்ளிருக்கும் வேளூர்க் கலம்பகம் பாடியது.

இங்ஙனம் இவரிருந்து வருகையில், அத்தலத்திருந்த சில தமிழன்பர்கள், படிக்காசுத் தம்பிரானார் செந்தமிழ்ப்பாடு வதில், மிக்க வல்லாரென நல்லோரான் சொல்லக்கேட்டு அவரையடுத்து, சைவசித்தாந்த நுண்ணுணர்வைத் திறம்பட வுணர்ந்த செந்தமிழ்ச் செல்வமே! இத்தலத்தில் தையநாயகி யாரோடு கோயில் கொண்டருளும் ஸ்ரீ வைத்தியநாதப் பெரு மானார்மீது, பாமணஞ் சிறக்கும் பைந்தமிழில் கலம்பகம் ஒன்று பாடியருளல் வேண்டுமென மிகவும் இரந்து வேண்டி னர். அன்பர்கள் தம் உள்ளன்புக்கு உவந்த தம்பிரான், திருவருளைச் சிந்தித்து, "புள்ளிருக்கும் வேளூர்க் கலம் பகம்" என்னும் பெயரில், சித்தாந்தக்கருத்துக்களும், சிவ மணப்பொலிவும், ஆதிமுதல்வனது அளப்பரும் பெருமைக ளும் இனிதுற, சொன்னோக்கும், பொருணோக்கும் சிறக்கச் செம்பாகமாகப் பாடி அவர்கள் சிந்தைகளிக்கச் செய்தனர். அக்கலம்பகத்திலிருந்து சில பாடல்களை ஈண்டு மாதிரிக்குத் தருகின்றோம். அவை வருமாறு:—

"கண்ணுண்டு வானவர்க் கோர் மதியுண்டு
கதியடையக் கருத்துமுண்டு
தண்ணுண்டு வலை தெறித்தான் முத்திதரத்
தீர்த்தமுண்டு தையலென்னும்
பெண்ணுண்டு நல்ல முத்துப் பிள்ளையுண்டு
வினைதீர்த்த பெருமான் பக்கல்
மண்ணுண்டு பிறப்பறுக்க மாட்டாமன்
மருந்துண்டு மயங்குவாரே." (10)

"ஆவணத்தார் சூடிவரு காவணத்தா ரேறியவா
ராவணத்தார் செஞ்சொற்
பாவணத்தாற் மறையோது நாவணத்தார்
மேகலையம் பணத்தா ராழி
மாவணத்தார் மழவிடையாந் தீவணத்தா
ரிதழியந்தார் மணத்தார் நாக
கோவணத்தா ரினிதுறையும் பூவணத்தார்
வேளூரெண் குணத்தார் தாமே." (21)

"ஓடெடுத்தா ரொருகாது தோடெடுத்தார்
வேளூர ருடுத்தார் தோலு
மாடெடுத்தா ரோரிண்டு மாடெடுத்தா ரவரு
ருக் கடுத்தார் மேல்பால்
வீடெடுத்தா ரண்டையிலே காடெடுத்தார்
கீலாலம் விட்டிராத
வேடெடுத்தா ரொருகையிலே கோடெடுத்தார்
யாவருக்கு மிறைவர் தாமே." (26)

"ஊசலிடு மனத்தடியேன் வேளூ ரையா
வுச்சியினிற் கரங்கூப்பி வைத்தே னுற்ற
நாசியினி லணியிதழி நாற்றங் கொண்டே
னுவினிலு மஞ்செழுத்தை நாட்டி வைத்தேன்
காசினிநின் சந்நிதியிற் சிறப்பை யெல்லாங்
கண்களுக்கே விருந்திட்டேன் காயமெங்கும்
பூசுதிருச் சாந்துண்டை மண்ணைப் பூசி
புந்தியினி னடிச்சுவடு பொறித்திட்டேனே" (79)

"வையக மதனிற் பிறந்துளா ரீகை மறந்துளா
 ரெனின் மறுபிறப்பிற்
கையகந் தனிலோர் கடிஞையு மேந்திக்
 கடைதொறும் பலியிரந்துழல் வார்
வெய்யதோர் பிறப்புமுனக்கிலை யிரந்துண் வினைப்பய
 னெவ் விதத்து நீ
யைய மேற்றுண்டதென் கொலோ வேளூரப்பனே
 யொப்பிலா மணியே." (81)

இத்திப்பிய நூலைத் தண்டமிழ் வாணரும், தனமிகு செல்வரும், பண்டார மூர்த்திகளும், பாவலோரும், மற்றும் பலரும் திரளாகக்கூடிய பேரவையின் கண், பெருமிதமாக வீற்றிருந்து தமது ஞானசாரியாரது திவ்ய சந்நிதானத்திலேயே அம்மூர்த்திகளிட்ட ஆணைக்கடங்கி அரங்கேற்றினர். சூழவிருந்து கேட்ட அன்பரனைவரும், தம்பிரானது தமிழ்ப் பெரும் புலமையினையும், பாவிசைக்கும் பான்மையினையும், எடுத்து மொழியும் எழிலுறு திறமையினையும், மற்றும் பல சிறப்பினையும் வெகுவாகப் புகழ்ந்து அவரை நன்கு பாராட்டினர்.

## தில்லை சேர்ந்ததும்—திருவடி நீழலடைந்ததும்.

இங்ஙனம் தமது புல்வேளூர்க் கலம்பகத்தை அரங்கேற்றிய பின், சிலகாலம் அம்மடத்தில் தானே கட்டளைத் தம்பிரான்பதவியில் பிறர் பழியாதவாறு பொறுப்பேற்று நடாத்தி வருகையில், இவருக்கு முன்னம், படிக்காசு தந்தருளிய சிதம்பரத்துச் சிற்சபை சிவகாமி யம்மையாரையும்,

சபாநாதரையும், சேவித்துச் சென்ம சித்தியடையவேண்டு மென்ற பேரவாவும், பெருங்காதலும் உள்ளத்தே தோன்றி அதே சிந்தையில் இவரை அல்லும் பகலும் ஆழ்த்திவந்தன. இந்நிலையிலிருந்து வருகின்ற இவர்க்கு,

## விருத்தம்.

"தவபுரத்தை யிழந்து கொடு நரகில் வீழ்வர்
சாலகடங் கடாவர் தகுவராவ
ரவபுரத்தி லம்பரத்தை யடைவர் தில்லை
அம்பலத்திற் றிருநடத்தை யறியாதோர்கள்
பவபுரத்தை யகல்வ ரந்தப்புரத்தை யாள்வர்
பரமபுரத் தணிவர்நிதி படைத்து வாழ்வர்
சிவபுரத்தில் வீற்றிருப்ப ரெம்மையாளச்
சிதம்பரத்திற் றிருநடத்தைத் தெரிசித்தோரே." (25)

## விருத்தம்.

"தரிசிக்க முத்திதரு நித்த ரத்தர் சிகரப் புயத்தர் புலியூரில்
இருவர்க்கு நிர்த்தமிடு சிற்சபைக் குளிறை பொற்பதத்தை
[மறவாமற்
பரிசிக்க முத்தி வசனிக்க முத்தி பணிதற்குமுத்தி மலராலே
அருசிக்க முத்தி பிரதக்கிணத்தில் வருதற்குமுத்தி தரு
[வாரே." (26)

## வெண்பா.

"தருத்தாவுபூஞ் சோலைச் சங்கரா தில்லை
நிருத்தா வுருகாதென் னெஞ்சம்—பருத்தமர
மேவம் பழுத்த விடைவெளி றில்லா வயிரம்
பாவம் பழுத்த பழம்."

## கட்டளைக் கலித்துறை.

"பழுத்துச் செத்தாலும் பிறந்து செத்தாலும் இப் பாழுடலங்
கொழுத்துச் செத்தாலும் மெலிந்து செத்தாலுங் கொலைப்
[படினும்
புழுத்துச் செத்தாலும் புதைத்தாலுங் காலிற் புரியைக் கட்டி
யிழுத்துச் செத்தாலுஞ் சிதம்பரத்தேசென் றிறத்தல்நன்றே."

எனவரும் இரட்டையர் "தில்லைக் கலம்பகச் செய்யுட்கள்" மேலும் மேலும் இவர் நினைவில் வந்து அழுந்தப்படிந்து நினைவைத் தடிக்கச்செய்தன. அதனால் தமது ஞானாசிரிய ரிடம்சென்று தமது கருத்தை விண்ணப்பிக்க அடிகளார் அன்புகூர்ந்துவிடைதர, நமது தம்பிரானார் சிதம்பரஞ் சேர்ந்து, ஆங்கு திருமடம் ஒன்று வகுத்துக்கொண்டு,

"ஆலம்புநீர் மூழ்கியும் அஞ்செழுத்து நவின்றும்
பொலம்புனை நறுமலர் புனைந்துஞ்
சிலம்படி பரவுதுஞ் செனனமறற் பொருட்டே"

என்றவாறு நாடோறும் வைகறையாமத் தெழுந்து தெய்வகங் கையில் மூழ்கி, திரு நீறணிந்து, கண்டிகை புனைந்து, ஐந் தெழுத்தோதி அம்பொற் சபையில் ஆனந்த நிர்த்தமிடும்

செம்பொற் சோதியைச் சித்தங்களிக்கச் சேவித்து அன்புருக நின்று, ஆனந்தக் கண்ணீர்பெருக்கிச் சிவானந்த வாரிதியில் தோய்ந்து திளைப்பர். இங்ஙனமே நாடோறும் தில்லை நாதரையும், சிவகாமி யம்மையாரையும், தரிசித்தும், தம்மை அடைந்த நன் மாணவர் பலர்க்கும் மெய்ப்பொருளை உபதேசித்தும். சைவ சித்தாந்த நூற்பொருள்களைச் செவியறிவுறுத்தியும், வருவர்.

இவ்வாறுகச் சித்தாந்த சைவரும், செந்தமிழ் வல்லவருமாய படிக்காசுத் தம்பிரானவர்கள் சிறிது காலம் தெய்வத் தொண்டாற்றி, எல்லாம் வல்ல எம்பெருமானர் திவ்ய திருவடி நிழலில் சேர்ந்தனர்.

இவர் திருவடிப்பேற்றை அடைந்தது தருமபுர வாதீனத்திலே என்றும், இவரது சமாதி அங்கு இன்றும் இருந்து குருபூசை ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றதென்றும் சிலர், பேரம்பலமாகிய சிதம்பரத்திற்கு அருகேயுள்ள கோற்றவன் குடி கிராமத்தையடுத்த ஓர் சிற்றூரில் சமாதியாயினரென்றும், அவரது சமாதி இன்றும் காட்சிப்பிரமாண நிலையில் உளதென்றும் கூறுகின்றனர். உண்மை அறியக்கூடவில்லை.

## இறுவாய்.

இவ்வளவே படிக்காசுத் தம்பிரான் வரலாறுகத் தெரிந்தவை. இச்செய்திகளால், இப்புலவர் பெருந்தகை, தெய்வப்புலமை வாய்ந்த பெரியாரில் ஒருவர் என்பதும், சிவபிரான் அருள் சிறக்கப்பெற்றவர் என்பதும், கலைமகளார் கருணை கடாட்சம் கைவரப்பெற்றதிப்பியப் புலவர் என்ப

தும், துறவற மடைந்து ஞான சமாதிகூடி ஏகாந்தத்தின் இனிமையுணர்ந்த ஞான சம்பன்னர் என்பதும், சந்தம்பாடு வதில் நிகரற்ற திறமை வாய்ந்த செந்தமிழ் வாணர் என்பதும இறைவன் இணையடிகளில் இடையறாத பக்தி செலுத்தி அவன் பேரருள் பெறுதலே சிறந்த பேறெனக்கருதும் இயல் புடையவர் என்பதும், தில்லைச்சிவகாம வல்லியார் இவர் பைந்தமிழ்ப்பாடலுக் குவந்து பரிசாகப் பஞ்சாட்சரப் படிமி சைப் பொற்காசு வைத்தருளப்பெற்ற பெரியார் என்பதும், மற்றும் இவரது உத்தமகுணவிசேடங்களும் நன்குவிளங்கும். இவர்க்கு வழங்கிய "படிக்காசுத் தம்பிரான்," "படிக்காசுப் புலவர்" என்பன இவரது பாடலுக்குப் பாகங்கலந்தா ளாகிய பார்ப்பதியார், பசும்பொன் அளிக்கப்பெற்ற விசே டத்தால் எழுந்த காரணப்பெயராகும். இப்புலவர்பிரானைப் படைத்தது நமது தொண்டை நாடெனின், அதற்கு இத னினும் பெருமை யாதுளது?

## பாட பேதங்கள்.

இத்தம்பிரானர் பாடியனவாக மேலே குறித்த பாடல் களில் "எல்லப்பன் அம்மையப்பன்," "ஓர் கறுப்பமில் லாத," "காவை வென்றிடு" என்பவைகள் 'சோக்கநாதப் புலவர்' பாடியவைகளாகவும், "மட்டாருந் தேன்களந்தை" எனப்படிக்காசுப் புலவரைப் புகழ்ந்த கும்பனது மதிப்புரைக் கவியைப் பல பட்டரைச் 'சோக்கநாதப் புலவர்' பாடியதாக வும் காணப்படுகின்றன. இச்சரிதங்களில் காணப்படும் பாடபேதங்களையும், மாறு பாடுகளையும் ஆங்காங்கே அடிக் குறிப்பாகவும், வேறு விதமாகவும் காட்டப்பட்டிருக் கின்றன.

## கால ஆராய்ச்சி.

இனி இப்புலவர் பெருமான் காலம் இன்னதென்பதை ஆராய்வாம்:— "மால்சீதக்காதி" "வேள் சீதக்காதி," "துரை சீதக்காதி" எனக்கீழக்கரை மகம்மதிய வள்ளல் சீதக்காதியைப் புகழ்ந்தும். "பூச்சக்கர மன்னர்பணி ரகுநாத சேதுபதி" "சேது ரகுநாத சிங்கமே," "புகழ் செய்தளவாய் குமாரன் ரகுநாதவேள்" என சேதுவேந்தரைச் சிறப்பித்தும் இவர் பாடுவதால், இவர் இற்றைக்கு 280 வருடங்களுக்கு முற்பட்டவர் எனத்தெரிகிறது. இப்புலவர் சேது வேந்தர்க்கு எழுதிய சீட்டுக்கவியிற் குறித்த இரகுநாத சேதுபதிப்பெயர், அவ்வழியினர் சிலர்க்குள பெயராயினும், கி.பி. 1647 முதல் 1672 வரை சேது நாட்டை மிக்கத்திறமையுடன் ஆட்சிபுரிந்தவரும், புலவர்க்குப் பெருநிதியாய் விளங்கிய வருமாகிய திருமலைச் சேதுபதியாம் ரகுநாத சேதுபதியையே குறிக்கின்றது. இந்தத் திருமலைச் சேதுபதிபேரில் தான் பொன்னுங்கால் அமிர்த கவிராயர் என்பவர், ஒரு துறைக் கோவைபாடிப் பதினாயிரம் பொன் பரிசுபெற்றது. இது—"கோவைத்துறைக்குப் பதினாயிரம் பொன் கொடுத்திசைகொள், தேவைத் துறைக்குத்துரை ரகுநாதன்" என அக்கவிராயர் பாடியதனாலே அறியத்தக்கது. இவ்வொரு துறைக்கோவை கொண்டவர் இவரே என்பது அக்கோவையில், "தளவாய் சேதுபதி புதல்வர், தமிழ்ச்செய்யுள் செய்தலினும் வல்லவர்" என்பதனாலும், "தளவாய் குமாரன்," "காக்குங் கருணையுங் கல்வியும் வாழ்வுங் கவி மதுர, வாக்குந் தழைத்த ரகுநாதன்" எனக்கூறுவதாலும் நன்கு அறியப்

படும். இக்காரணங்களால் இப்புலவர் பெருந்தகை இன்றைக்கு 280 வருடங்களுக்கு முன் விளங்கியோராவர்.

## இவரை ஆதரித்த அரசர்கள்.

இராமநாதபுரம் 'இரகுநாத சேதுபதி' சிவகங்கைத் 'திருமலைத்தேவர்' அரியலூர் ஜமீன் 'லட்சுமண ரங்கழ வேந்த்ரன்' ஆதியோராவர்.

## அபிமானித்த பிரபுக்கள்.

மகாபலிபுரம் 'சிவந்தான் மல்லையன்', வல்லம் 'காளத்தியப்பர்', மாவண்டூர் 'கறுப்பமுதலியார்', கீழக்கரைச் 'சீதக்காதி மரைக்காயர்', மோரூர் 'குமாரசாமிக் காங்கேயர்' மாந்தைக்குடி 'மகாஜனத் தலைவர்' முதலியோர்.

## சமகாலத்துப் புலவர்கள்.

பொன்னுங்கால் 'அமிர்த கவிராயர்', சிவகங்கைக் கடம்பங்குடி பலபட்டரைச் 'சொக்க நாதப் புலவர்', ஊர்விளங்காத மற்றொரு, 'சொக்க நாதக்கவிராயர்', எமனேச்சுரம் 'சவ்வாதுப் புலவர்', திருமங்கலம் 'சுப்பிரதீபக் கவிராயர்' பாண்டி நாட்டு 'நமசிவாயப் புலவர்', குடந்தைக் 'கும்பகவி' கோங்குப்புலவர்', 'துட்டகவி', 'நீட்டுரேகவி', சோழமண்டல சதகம்பாடிய வேளூர் ஆத்மநாத தேசிகர், ஒப்பிலா மணி தேசிகர், 'ஜானகி பரிணயம்,' 'சிருங்கார திலகம்,' பரிபாஷாபிவிருத்தி வியாக்யானம் என்ற 'வியாகரணம்,' ஷட்தரிசினி சித்தாந்தம்' முதலிய நூல்களியற்றிய ராமபத்திர

தீக்ஷிதர், மதுரைப்பதிற்றுப் பத்தாந்திபாடியம், வேறுபல நூலியற்றியும், இராமநாதபுரம் ரகுநாதசேதுபதி அரசரால் 'மானூரும்,' 'கலையூரும்' முற்றூட்டாகப்பெற்ற அநந்தகவி ராயர் முதலியோரும், இவரது பேராசிரியர் இலக்கண விளக்கம் திருவாரூர் வைத்தியநாத நாவலரும், அவரது குமாரர் ஸ்ரீ சதாசிவ தேசிகரும் ஆவர்.

முற்றிற்று.

மனோரஞ்சினி ப்ரஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.


| எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | அஞ்சாலி | 38 |
| 2. | அந்திப்பிறை | 41 |
| 3. | அலம்புநீர் | 75 |
| 4. | அழுக்காற்றி | 51 |
| 5. | அலைமுகந் | 54 |
| 6. | அடகெடு | 65 |
| 7. | அறவாழி | 67 |
| 8. | ஆவிற்கு | 18 |
| 9. | ஆராயும் | 60 |
| 10. | ஆளாகார் | 67 |
| 11. | ஆய்வார் | 70 |
| 12. | ஆவணத்தார் | 72 |
| 13. | இந்தச்ச | 24 |
| 14. | இயத்தலை | 43 |
| 15. | ஈயாத | 53 |
| 16. | உளமலி | 4 |
| 17. | உடுப்பது | 51 |
| 18. | உரைகொண் | 15 |
| 19. | ஊசவிடு | 72 |
| 20. | எழுத்தசை | 15 |
| 21. | எல்லப்பன் | 24 |
| 22. | என்னெஞ்சு | 33 |
| 23. | எந்தை | 37 |
| 24. | ஏயுமாறு | 2 |
| 25. | ஓர்கறுப்பு | 25 |
| 26. | ஓர்தட்டிலே | 53 |
| 27. | ஓதரிய | 64 |
| 28. | ஓடெடுத் | 72 |
| 29. | கன்னன் | 3 |
| 30. | கற்றவர் | 4 |
| 31. | கள்ளூர் | 8 |

| எண். | | பக்சம் |
|---|---|---|
| 32. | கரவாத | 18 |
| 33. | கன்மாரி | 23 |
| 34. | கரத்தால் | 27 |
| 35. | கண்டுபணிய | 33 |
| 36. | கள்ளிக்கேன் | 34 |
| 37. | கனத்தசிராப் | 35 |
| 38. | கற்றை | 46 |
| 39. | கல்லடி | 56 |
| 40. | கல்லைத்தான் | 66 |
| 41. | கட்டுமாங் | 63 |
| 42. | கண்ணுண்டு | 71 |
| 43. | கருவருந் | 61 |
| 44. | காளமேகம் | 11,21 |
| 45. | காவை | 24 |
| 46. | காரூர் | 41 |
| 47. | காய்ந்து | 53 |
| 48. | காரேய் | 55 |
| 49. | காட்டிருந் | 69 |
| 50. | குளக்காவி | 34 |
| 51. | கும்பா | 47 |
| 52. | கூடுஞ்ச | 12 |
| 53. | கூடுந்தி | 23 |
| 54. | கூம்பலங் | 40 |
| 55. | கேட்டா | 26 |
| 56. | கொல்லையிற் | 20 |
| 57. | கொஞ்சுகவி | 32 |
| 58. | கொல்லத் | 33 |
| 59. | கொடியருக் | 62 |
| 60. | சங்கங் | 54 |
| 61. | சாணூரும் | 49 |
| 62. | சாதலும் | 51 |

| எண். | | பக்கம். |
|---|---|---|
| 63. | சித்திரமுங் | 11 |
| 64. | சின்னஞ் | 56 |
| 65. | சீரிசைக் | 8 |
| 66. | சீர்கொண்ட | 25 |
| 67. | சுழித்தேர் | 55 |
| 68. | சுகத்திலே | 7 |
| 69. | செங்காவி | 62 |
| 70. | செம்மலர் | 67 |
| 71. | சேணூர் | 26 |
| 72. | தரைகண்ட | 53 |
| 73. | தடகும்ப | 60 |
| 74. | தரிசிக்க | 74 |
| 75. | தவபுரத்தை | 74 |
| 76. | தருத்தாவு | 75 |
| 77. | தாயறிவாள் | 63 |
| 78. | தாயினும் | 26 |
| 79. | திரளுமணி | 54 |
| 80. | தினகர | 54 |
| 81. | துரைத்தியாகர் | 26 |
| 82. | தூளிபடவே | 36 |
| 83. | தெண்ணீர் | 3 |
| 84. | தெள்ளமிர்த | 14 |
| 85. | தென்னரங்கன் | 31 |
| 86. | தேமணக்கும் | 48 |
| 87. | தேவைராகு | 49 |
| 88. | தேட்டாளன் | 58 |
| 89. | நற்றோரண | 20 |
| 90. | நல்லார் | 38 |
| 91. | நன்றாயுன் | 39 |
| 92. | நன்றாய் | 4 |
| 93. | நான்மறை | 39 |
| 94. | நாட்டிற் | 52 |
| 95. | நெருந | 67 |
| 96. | நெருப்பி | 17 |
| 97. | நேசித்து | 53 |
| 98. | பயன்மர | 46 |
| 99. | பரியாம | 64 |
| 100. | பல்லெலா | 65 |
| 101. | பழுத்துச் | 75 |
| 102. | பார்கெழு | 46 |
| 103. | புகழ்பூத் | 6 |
| 104. | பூமாதிருந் | 58 |
| 105. | பெற்றாள் | 19 |
| 106. | பொல்லாத | 28 |
| 107. | போதகலா | 41 |
| 108. | போய்வதனு | 55 |
| 109. | மட்டாரு | 5,48 |
| 110. | மறந்தாகிலு | 59 |
| 111. | மாகத்தத்தும் | 60 |
| 112. | மாலார்களங்கத | 3 |
| 113. | மாவிருக்கும் | 7 |
| 114. | முற்கரை | 56 |
| 115. | முன்னம் | 56 |
| 116. | மூவேந்தரும் | 45 |
| 117. | மைப்போதகம் | 59 |
| 118. | வழிமேல் | 20 |
| 119. | வடுகர்மேற் | 35 |
| 120. | வார்மலி | 68 |
| 121. | வாழ்வைக் | 34 |
| 122. | விண்ணுக்கும் | 58 |
| 123. | விருதுகவி | 44 |
| 124. | வேல்கொடுத் | 28 |
| 125. | வையக | 73 |

# பிழையும்—திருத்தமும்

THE MADURA TAMI

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 10 | 19 | ஸ்ரீ பால சுந்தர | ஸ்ரீ சுந்தர |
| ,, | 10 | பரவைதூது | பரவைபால்தூது |
| 15 | 8 | கிர்த்தனைகள் | கீர்த்தனைகள் |
| 17 | 23 | சக்களத்தி | சககளத்தி |
| 26 | 16 | மரத்தாண் | மரைத்தாண் |
| 53 | 4 | புலவர் | புல்வர் |
| ,, | 23 | வண்ளலின் | வள்ளலின் |
| ,, | ,, | அரூமை | அருமை |
| 55 | 5 | வடிவெற்குமரன் | வடிவேற்குமரன் |
| 56 | 9 | சர்கரை | சர்க்கரை |
| 57 | 10 | மகழும் | மகிழும் |
| 60 | 3 | வடகருங் | வடக்குங் |
| ,, | 5 | னன்ருய் | நற்ருய் |